266

வ.உ.சிதம்பரனார்

நூற்றாண்டு மலர் - 1872-1972



அழகிய - புதிய - பெரிய - வசதியான

அறைகள் கொண்ட

'கவிதா'

சென்னைக்கு மேலும் அழகு தருகிறது!
உங்கள் சேவைக்குக் காத்திருக்கிறது !!

அழகிய ஏர்கண்டிஷன் அறைகளின் பெயர்கள் :

கங்கா, யமுனா, அமராவதி, காவேரி, நேத்ராவதி, ஜோக்பால்ஸ், பவானி, கிருஷ்ணா, கோதாவரி, சிந்து, வைகை, பம்பை.



ஹோட்டல் கவிதா

தென் சென்னையின் மையப் பகுதியான
ஆழ்வார் பேட்டையில் அமைந்துள்ளது

ராமசாமி அய்யர் ரோடு,
18

ஒத்துழைப்போம் வாரீர் !

★ 'கப்பலோட்டிய தமிழன்'—வ. உ. சிதம்பரனாருக்கு உலகத் தமிழ் மாநாட்டின் போது சென்னைத் துறைமுக வாயிலில் சிலை எழுப்பிச் சிறப்புறச் செய்தது

தமிழ்நாடு அரசு

★ 'செக்கிழுத்த செம்மல்' சிதம்பரனாரின் தியாகத்தினை நினைவு படுத்தும் வகையில் கோவைச் சிறையில் இருந்த செக்கினைச் சென்னைக்குக் கொண்டு வந்து, அதைக் காட்சிப் பொருளாக்கத் திட்டமிட்டுள்ளது

தமிழ்நாடு அரசு

★ சென்னை ஜார்ஜ்டவுன் பகுதியைச் 'சிதம்பரனார் நகர்' என்று பெயர் மாற்றிச் சிறப்புச் செய்வது

தமிழ்நாடு அரசு

★ தேச பக்தர் சிதம்பரனாரின் நூற்றாண்டு விழாவில், தூத்துக் குடியில் அவருக்குச் சிலை எழுப்பிச் சிறப்புச் செய்தது

தமிழ்நாடு அரசு

★ செந்தமிழ் வளர்த்த சிதம்பரனார் போற்றிய திருக்குறளைப் பேருந்துகளில் எழுதியும், மயிலாப்பூர் திருவள்ளுவர் கோயிலைத் திருவள்ளுவர் கலைக் கோயிலாக உருவாக்கத் திட்டமிட்டுச் செயற்படுவதும்

தமிழ்நாடு அரசு

★ தியாகத்தைப் போற்றித் தியாகிகளைச் சிறப்பிக்கும் தமிழ்நாடு அரசின் திட்டம் பணிகள் சிறந்தோங்க ஒத்துழைப்போம் வாரீர்!

வெளியீடு :

இயக்குநர்,

செய்தி - மக்கள் தொடர்புத் துறை,

தமிழ்நாடு அரசு.

வ. உ. சி. நூற்றாண்டு

பேசிவிட்டே சுயராஜ்யம் பெறலா மென்று
பெரியபல தீர்மானக் கோவை செய்து
காசுபணம் பெருமையினுல் தலைவ ராகிக்
காங்கிரசை நடத்தியதைக் கண்டு நொந்து
தேசநலம் தியாகமின்றி வருமோ? என்று
திலகர்பிரான் செய்தபெருங் கிளர்ச்சி சேர்ந்து
ஓசைபடா துழைத்தபல பெரியோர் தம்முள்
உண்மைமிக்க சிதம்பரனார் ஒருவ ராகும்.

—காந்தியுகக் கவிஞர் நாமக்கல் வெ. இராமலிங்கம் பிள்ளை

விளம்பர உதவி

சக்தி சுகர்ஸ் லிமிடெட்

72, சென்குப்தா தெரு,

கோயமுத்தூர்-9.

அரவிந்தர், ஆந்திரகேசரி பிரகாசம், வ. உ. சிதம்பரனார் ஆகிய மூவரும்; ஒரே ஆண்டில் பிறந்தவர்கள். உறங்கிக் கொண்டிருந்த இந்தியாவைத் தட்டி எழுப்பிய பெருந்தலைவர்கள்.

அவ்வாறிருந்தும், அரவிந்தருக்கும் ஆந்திர கேசரி பிரகாசத்திற்கும் கிடைத்துள்ள விளம்பரம், கப்பலோட்டிய தமிழர் வ. உ. சி. அவர்களுக்குக் கிடைக்கவில்லை.

அரவிந்தர் ஒரு வங்காளி. எந்த ஒரு வங்காளியும் அவரை மறக்கவில்லை. பிரகாசம் ஒரு தெலுங்கர். எந்த ஒரு தெலுங்கனும் அவரைப் பாராட்டத் தவறவில்லை. ஆனால், தமிழர்கள் மட்டுந்தான் வ. உ. சியை மறந்து விட்டனர். அவரது அருமை பெருமைகளைப் பாறைசாற்றத் தவறிவிட்டனர்.

பழைய தலைமுறை அவரைமறந்தாலும், மறைத்து விட்டாலும், இப்போதிருக்கும் புதிய தலைமுறை அவரைப் பாராட்ட மறந்துவிடவில்லை!

உலக அரசியல் தலைவர்களுள் ஒருவராகிய காந்தி அடிகளை இராமலிங்க அடிகளோடு ஒப்பிட்டால், வ உ.சி அவர்களை ஆறுமுக நாவலரோடு ஒப்பிடலாம்.

ஏனென்றால், ஆறுமுக நாவலர் இராமலிங்க அடிகளை எதிர்த்தவர். வ. உ. சி காந்தி அடிகளை எதிர்த்தவர்.

இராமலிங்க அடிகளுக்கும் காந்தி அடிகளுக்கும் கிடைத்த பெரும்புகழ், அவர்களை எதிர்த்த ஆறுமுகநாவலருக்கும் வ உ. சி.க்கும் கிடைக்கவில்லை என்றாலும், எதிர்த்தவர்கள் எதிர்க்கப்பட்டவர்களைவிடச் சிறந்தவர்கள்.

காந்தியும் நேருவும் சிறையில் இருந்தபோது செக்கிழுக்கவில்லை. அவ்வளவு கொடுமைகளை அவர்கள் அனுபவித்ததில்லை. ஆனால் செம்மல் சிதம்பரனார் சிறையிலே செக்கிழுத்தார். கல்லுடைத்தார் பஞ்சுபடும் பாடுபட்டார்!

தென்னாட்டு அரசியலுக்கு அடியெடுத்துக் கொடுத்தவராகிய வ. உ. சி. அவர்கள், உலகத் தலைவர்களுள் ஒருவராகவும், கவிஞர்கள் பாராட்டிய கவிஞராகவும்; கப்பலோட்டிய காவலராகவும்; ஒழுக்கத்தால் உயர்ந்தவராகவும் இருந்தவர் ஆதலின், மற்ற தலைவர்களைக காட்டிலும் அவரை நான் மிகவும் மேலானவராகக் கருதுகின்றேன்.

1936-ல் காலமான அவரைப் பற்றி 36-ஆண்டுகளுக்குப் பிறகு, இந்த மலர் அவரது நூற்றாண்டு நினைவாக வெளிவருகின்றது.

இம்மலரில் இன்னும் எத்தனையோ செய்திகள் இடம் பெறாமல் இருக்கலாம். ஆனால், இதில் என் இதயம் நிச்சயமாக இடம் பெற்றிருக்கின்றது

இம்மலரை, வ. உ. சி. அவர்கள் ஓட்டிய கப்பலுக்குக் காணிக்கையாக்குகின்றேன்.



சென்னை :
ஓடியன் A/C
பிராட்வே
ராக்ஸி
மற்றும்
தென்னாடெங்கும்
நேஷனல்
பிக்சர்ஸ்
தங்கதுரை
ஈஸ்ட்மென்கலர் (ஜெமினி)
திரைக்கதை-வசனம் :
திருவாரூர் K. தங்கராசு
டைரக்ஷன் :
A. காசிலிங்கம்
ELEGANT

அரசியல் தலைவர்களும்
அவர்கள் பிறந்த ஆண்டுகளும்



கர்மவீரன் பீஷ்வா நானா சாகிப் முதல்
கலைஞர் டாக்டர் கருணாநிதி வரையில்

1824 பீஷ்வா நானா சாகிப்

1825 தாதாபாய் நௌரோஜி

1826 ராஜ நாராயண் போஸ்

1827

1828

1829

1830

1831

1832

1833

1834

1835 ஜான்சிராணி லட்சுமிபாய்

1836 சர் வில்லியம் வெட்டர் பர்ன்

1837

1838

1839

1840

1841

1842 மகாதேவ கோவிந்த ரானடே
டாக்டர் எஸ். சுப்பிரமணிய ஐயர்

1843 ராவ்சாகிப் ஓ. அனந்தா சார்லு

1844 உமேஷ் சந்திர பானர்ஜி
அம்பாலால் சாகர்லால் தேசாய்
பத்ருதீன் தயாப்ஜி

1845 டாக்டர் ராஷ்பிகாரி கோஷ்
சர் பெரோஷ்ஷா மேத்தா

1846 ஆனந்த மோகன் கோஷ்

1847 அன்னி பெசண்ட்

1848 சுரேந்திரநாத் பானர்ஜி

1849 லால் மோகன் போஸ்

1850

1851 அம்பிகாசரண் மஜும்தார்

1852 சர். பிட்டி தியாகராய செட்டியார்
சேலம் சி. விஜயராகவாச்சாரியார்

1853

1854

1855 என். ஜே. சந்தா வர்க்கர்

1856 பால கங்காதர திலகர்

1857 சி. சங்கரன் நாயர்

1858 விபின சந்திர பாலர்

1859

1860

1861 பண்டித மோதிலால் நேரு
பண்டித மதன மோகன மாளவியா
மேடம் பிகாஜி ருஸ்தும் காமா

1862

1863

1864 பண்டித பிஷன் நாராயண தாஸ்

1865 லாலா லஜபதி ராய்
மதுரை வேங்கடராமையர்

1866 கோபால கிருஷ்ண கோகலே
பனகல் அரசர் ராமராயநிங்கவாரு

1867 காஜுலு லட்சுமி நரசு செட்டியார்

1868 டாக்டர் டி. எம். நாயர்

1869 காந்தி அடிகள்
ரைட் ஹானரபிள் சீனிவாச சாஸ்திரி

1870 சித்த ரஞ்சன் தாஸ்

1871 கங்காதர் ராவ் தேஷ்பாண்டே
தீனபந்து ஆண்ட்ரூஸ்

1872 வ. உ. சிதம்பரம் பிள்ளை
அரவிந்த கோஷ்
ஆந்திரகேசரி டி. பிரகாசம்

1873

1874 எஸ். சீனிவாச ஐயங்கார்

1875 சர்தார் வல்லபாய் படேல்
சர் தேஜ்பகதூர் சாப்ரூ

1876 மகமதலி ஜின்னு

1877 ஆகாகான் III

1878 மௌலானு மகமதலி

1879 ராஜாஜி
பெரியார் ஈ. வே. ராமசாமி
சர். சி. பி. ராமசாமி ஐயர்
திருமதி சரோஜனி நாயுடு

1880 டாக்டர் அன்சாரி
பிரேம் சந்த் முன்ஷி
சக்கரைச் செட்டியார்

1881 வ. வே. சு. ஐயர்

1882 புருஷோத்தம தாஸ் டாண்டன்
சி. என். முத்துரங்க முதலியார்
கே. பாஷ்யம்

1883 விநாயக தாமோதர சவர்ககார்
சர் ஏ. டி. பன்னீர் செல்வம்
டாக்டர் கான்சாகிப்
நந்தலால் போஸ்
திரு. வி. க.
தாராசிங்

1884 டாக்டர் ராஜேந்திர பிரசாத்
சுப்பிரமணிய சிவா

1885 வேலஞ்சேரி B. முனுசாமி நாயுடு
பட்டம் தாணுப்பிள்ளை

1886

1887 டாக்டர் பி வரதராஜுலு நாயுடு
சர். ஏ. இராமசாமி முதலியார்
எஸ். சத்திய மூர்த்தி
டாக்டர் ஹரிதயாள்
பண்டித கோவிந்த வல்லப பந்த்
கே. எம் முன்ஷி

1888 மௌலானு அபுல்கலாம் ஆசாத்
ஆச்சாரிய கிருபளானி
டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன்

1889 பண்டித ஜவஹர்லால் நேரு
டாக்டர் பி. சுப்பராயன்
டி. டி. கிருஷ்ணமாச்சாரி

1890 எஸ். ஏ. டாங்கே
கான் அப்துல் கப்பார்கான்

1891

1892 டாக்டர் அம்பேத்கார்
சர். ஆர்.கே. சண்முகம் செட்டியார்

1893 ஆச்சாரிய நரேந்திர தேவா

1894 ஆச்சாரிய விநோபா பாவே
டாக்டர் சாந்தி சொரூப் பட்நாகர்
ரபிஅகமத் கித்வாய்

1895 ஓ பி இராமசாமி ரெட்டியார்
ஏ. நேசமணி
கே. சந்தானம்

1896 வி. கே கிருஷ்ண மேனன்
காயிதேமில்லத் இஸ்மாயில் சாகிப்
பத்மஸ்ரீ கே. வேங்கடசாமி நாயுடு

1897 நேதாஜி சுபாஷ்சந்திர போஸ்
ஜதீந்திரநாத் முகர்ஜி
எம். பக்த வத்சலம்
சர்தார் வேதரத்தினம் பிள்ளை
அல்லூரி சீதாராம ராஜு
தில்லையாடி வள்ளியம்மை

1898 கோவை. அய்யாமுத்து
குமாரசாமி ராஜா
பரலி சு. நெல்லையப்பர்

1899 ராஜகுமாரி அமிர்த கௌர்

1900 விஜயலட்சுமி பண்டிட்

1901 டாக்டர் ஸ்யாம் பிரசாத் முகர்ஜி

1902 ஜெயப்பிரகாஷ் நாராயண்
நிஜலிங்கப்பா

1903 காமராஜ்
அவிநாசிலிங்கம் செட்டியார்
திருமதி சுசேதா கிருபளானி

1904 டாக்டர் செண்பகராமன் பிள்ளை
லால் பகதூர் சாஸ்திரி
ஏ. கே. கோபாலன்
திருப்பூர்க் குமரன்

1905 ஷேக் அப்துல்லா
சி. பா. ஆதித்தனார்

1906 ஜீவானந்தம்
ம. பொ. சிவஞானம்
டி. எஸ். ராமாநுஜம்
வேலூர் உபயதுல்லா

1907 பகத்சிங்

1908 பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர்
பி. ராமமூர்த்தி

1909 டாக்டர் பேரறிஞர் அண்ணா
பிரமானந்த ரெட்டி
கே. ராஜாராம் நாயுடு
ஆர் வி. சாமிநாதன்

1910 டாக்டர் ராம் மனோகர் லோகியா
திருப்பூர் மொஹிதீன்
காஞ்சிபுரம் கே. எஸ் பார்த்தசாரதி
டி. என். ராமச்சந்திரன்

1911 அசோக் மேத்தா
ஓ வி. அளகேசன்
மணலி கந்தசாமி
பதேசிங்

1912 அமைச்சர் என்.வி. நடராசன்
லூர்தம்மாள் சைமன்

1913 லீலாவதி ராமசுப்பிரமணியம்

1914 கே. டி. கே. தங்கமணி
சி. அந்தோணிப் பிள்ளை

1915 எஸ். ஆர். சுப்பிரமணியம்
முகவை இராசமாணிக்கம்

1916 பிஜு பட்நாயக்

1917 இந்திரா காந்தி
எம். ஜி. ஆர்.
ஜோதியம்மாள்

1918 கே. பால தண்டாயுதம்

1919 அமைச்சர் அன்பில் தர்மலிங்கம்

1920 டாக்டர் நாவலர் நெடுஞ்செழியன்
எஸ். எஸ். மாரிசாமி

1921 சஞ்சீவையா
தூக்குமேடை இராஜகோபாலன்

1922 பேராசிரியர் க. அன்பழகன்

1923 அமைச்சர் ப. உ. சண்முகம்
அமைச்சர் சத்தியவாணிமுத்து

1924 டாக்டர் கலைஞர் கருணாநிதி

தொகுத்தவர் : கவிஞர் சுரதா

இப்பொழுது நடைபெறுகிறது!

சென்னை குளோப், ஸ்ரீகிருஷ்ணா, மகாலட்சுமி, ராஜகுமாரி

மற்றும் தென்னாடெங்கும்

'பாரத்' புரட்சி நடிகர் **எம்.ஜி.ஆர்** அளிக்கும்

மணியனின்

இதய வீணை

உதயம் புரொடக்ஷன்ஸாரின் வண்ணக்காவியம்

டைரக்ஷன்; **கிருஷ்ணன் பஞ்சு** தயாரிப்பு; **மணியன், வித்வான் வே.லட்சுமணன்**

விடுதலைப் போரில் வரலாறு படைத்த மாவீரன்,
"கப்பலோட்டிய தமிழன்" வ. உ. சி. யின்

நூற்றாண்டு நினைவு மலருக்கு

எமது இதயங் கனிந்த வாழ்த்துக்கள்

விரைவில் வருகிறது!

பத்மினி பிக்சர்ஸ்

கங்கா கௌரி

வண்ணத்தில் உருவாகும் விண்ணவர் காதை.
புராணத்தில் புதியதோர் சித்திரக் கவிதை.

நடிகர்கள் :

ஜெமினி கணேஷ், ஜெயலலிதா, ஜெயந்தி, சோ, சிவகுமார்
O. A. K. தேவர், தேங்காய் சீனிவாசன், மனோரமா, குமாரி
பத்மினி, கீதாஞ்சலி, *C. K.* சரஸ்வதி முதலியோர்.

தயாரிப்பு & டைரக்ஷன்

B. R. பந்துலு

விடுதலைக்குழைத்த வீரர்கள்

உரிமையின் பரிசு (காந்திக் களஞ்சியம்)	5 50
உலகப் பேரொளி நேரு (தொகுப்பு நூல்)	8 75
தமிழ்ப் பேரொளி (அறிஞர் அண்ணா பற்றிய தொகுப்பு)	10 00
திரு. வி. க. வாழ்க்கைக் குறிப்புக்கள் (2 பகுதிகள்)	18 00
விடுதலை வீரர்கள் ஐவர் (கவிதைத் தொகுப்பு) (கவியரங்கத் தலைவர் மாண்புமிகு கலைஞர் கருணாநிதி)	1 50
அரசியல் தலைவர் ஐவர்	4 00
நம் நாட்டுத் தலைவர்கள் (பாஞ்சாலங் குறிச்சி வீரர்கள்)	1 00
சர்தார் வல்லபாய் படேல்	1 50
வீர சிதம்பரனார்	1 50
திலகர்—கோகலே	1 50
அண்ணல் ஆபிரகாம்—புலவர் இளங்குமரன்	2 00

முழு விவரங்கட்கு :

திருநெல்வேலி, தென்னிந்திய

சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிட்.,

1/140, பிராட்வே, சென்னை—1.

திருநெல்வேலி-6 மதுரை-1 கோயமுத்தூர்-1

படித்தீர்களா? வ. உ. சி. பற்றி வானதி வெளியீடுகள்!

அமரர் நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை எழுதிய நான் கண்ட வ. உ. சி.	ரூ 1 25
புலவர் நாக சண்முகம் எழுதிய வ. உ. சிதம்பரம் பிள்ளை (வாழ்க்கை வரலாறு)	1 25
எஸ். நடராசன் எழுதிய சுதந்திரச் சிந்தனைகள்	6 00

நாடு சுதந்திரம் அடைந்த வெள்ளி விழாவையொட்டி வெளியிடப் பெற்ற அற்புதமான வெளியீடு.

வானதி பதிப்பகம்

82/11 பாண்டி பசார்,

தி. நகர் :: சென்னை-17

CONNEMARA PUBLIC LIBRARY
31 JAN 1973
MADRAS

பெரும் பிறப்பிடம்

அழகிரிசாமி	பட்டுக்கோட்டை
அன்பழகன்	காட்டூர்
அரங்கண்ணல்	கோமல்
அன்புச் செழியன்	செக்காபட்டி
அனந்தாசார்லு	கடமஞ்சி
ஆர். வி. சாமிநாதன்	பாகநேரி
இராஜகுமாரி அமிர்தகௌர்	கபூர்தலா
இந்திரா காந்தி	அலகாபாத்
இஸ்மாயில் சாகிப்	பேட்டை
ஈ. வி. கே. சம்பத்	ஈரோடு
என். ஆர். சாமியப்ப முதலியார்	நெடும்பலம்
எம். பக்தவத்சலம்	மீஞ்சூர்
எஸ். சத்தியமூர்த்தி	செம்மனும்பொட்டல்
என்.வி. நடராசன்	பெத்துநாயக்கன்பேட்டை
எம். ஜி. ஆர்.	கண்டி
ஏ. கோவிந்தசாமி	தேங்காய்த்திட்டு
க. இராசாராம்	ஆத்தூர்
கக்கன்	தும்பைப்பட்டி
காந்தி அடிகள்	போர்பந்தர்
கான் அப்துல் கப்பார்கான்	உத்மான்சிங்
காமராஜ்	விருதுநகர்
கா. வேழவேந்தன்	காரணி
கிருபளானி	ஐதராபாத்
குமாரசாமி ராஜா	இராஜபாளையம்
கே. டி. கே. தங்கமணி	திருமங்கலம்
கோகலே	காட்லூக்
கோவை செழியன்	குங்காரு பாளையம்
நேரு	அலகாபாத்
சர். ஏ. டி. பன்னீர்செல்வம்	பெரும்பண்ணையூர்
சர். ஏ. இராமசாமி முதலியார்	ஆர்க்காடு
சர்தார் வல்லபாய்படேல்	கரம்சாத்
சக்கரைச் செட்டியார்	வெங்கல்
சஞ்சீவையா	படப்பாடு
சத்தியவாணிமுத்து	செங்கற்பட்டு
சாதிக்பாட்சா	உடுமலைப்பேட்டை
சித்தரஞ்சன்தாஸ்	கல்கத்தா
சி. சுப்பிரமணியம்	செங்குட்டைப் பாளையம்
சி. பா. ஆதித்தனார்	காயாமொழி
செ. மாதவன்	சிங்கம்புணரி
செ. கந்தப்பன்	எடப்பாடி
சேலம் விஜயராகவாச்சாரியார்	மதுராந்தகம்

சுப்பிரமணிய சிவா	வத்தலக்குண்டு
ஜெயப்பிரகாஷ் நாராயண்	சீதப்தியாரா
ஜோதியம்மாள்	மேய்ம்யோ
டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு	இராசிபுரம்
டாக்டர் பி. சுப்பராயன்	திருச்செங்கோடு
டாக்டர் சண்முகம் செட்டியார்	கோயமுத்தூர்
டாக்டர் டி. எம். நாயர்	துஞ்சன் பரம்பா
டாக்டர் ராதாகிருஷ்ணன்	சர்வேபள்ளி
டாக்டர் அம்பேத்கார்	அம்பேட்
டாக்டர் சண்பகராமன்	திருவிதாங்கூர்
டாக்டர் நெடுஞ்செழியன்	வடகளத்தூர்
டாக்டர் எச். வி. ஹாண்டே	கோயமுத்தூர்
தாதாபாய் நௌரோஜி	பம்பாய்
திலகர்	இரத்தினகிரி
திரு. வி. க.	துள்ளம்
நாடிமுத்துப் பிள்ளை	பட்டுக் கோட்டை
நா. காசிராமன்	புத்தகரம்
நிஜலிங்கப்பா	அலுகவேல்
ப. ஜீவானந்தம்	பூதப்பாண்டி
பகதசிங்	பஞ்சாப்
பாலதண்டாயுதம்	மாக்கினப் பட்டி
பிரமானந்த ரெட்டி	குண்டூர்
பிரகாசம்	சனுபர்த்தி
பீஷ்வா நானா சாகிப்	வேணு
பெரியார் இராமசாமி	ஈரோடு
பெ. சீனிவாசன்	அய்யப்ப நாயக்கர் பட்டி
மதன மோகன மாளவியா	அலகாபாத்
ம வெ. நாராயணசாமி	போளூர்
ம. பொ. சி.	சாகுவான்குப்பம்
முத்துரங்கமுதலியார்	நசரத்பேட்டை
மு. கண்ணப்பன்	கிணத்துக்கடவு
முத்துராமலிங்கத் தேவர்	பசும்பொன்
மூக்கையா தேவர்	பாப்பாரப்பட்டி
ராஜாஜி	தொரப்பள்ளி
லாலா லஜபதி ராய்	பஞ்சாப்
லால் பகதூர் சாஸ்திரி	மொகல் சராய்
லூர்தம்மாள் சைமன்	மணக்குடி
வ. உ. சி.	ஒட்டப்பிடாரம்
வல்லபாய் படேல்	கரம்சாத்
வ. வே. சு. ஐயர்	சின்னாளப்பன் பட்டி
வாஞ்சி நாதன்	செங்கோட்டை
வி. வி. கிரி	பெர்காம்பூர்
விஸ்வநாத தாஸ்	சிவகாசி
விநோபா பாவே	காகோடா

ஜான்சிராணி லட்சுமி பாய் **காசி**

(1835—1358) (உத்தரப் பிரதேசம்)

மாவெலாம் அரிகள் பாட மகிழ்ந்துநல் வாசம் மன்னும்
பூவெலாம் செழுந்தேன் நல்கப் பூவையும் கிளியும் ஓதும்
பாவெலாம் உருகக் கேட்டுப் பலகனி பரிசில் நல்கிக்
காவெலாம் தலைய சைக்கும் காசி நாடு......................

நூல் : அரிச்சந்திர புராணம்
நூலாசிரியர் : வீரகவிராயர்

டாக்டர் எஸ். சுப்பிரமணிய ஐயர் **மதுரை**

(1842— ?) (மதுரை மாவட்டம்)

வடுவின் மாநில மடந்தைமார் பிடைக்கிடுந் திமைக்கப்
படுவி லாரமே பாண்டிநா டாரமேற் பக்கத்
திடுவின் மாமணி யதன்புற நகரெலா மிவற்றுள்
நடுவி ஞயக மாமணி மதுரைமா நகரம்.

நூல் : திருவிளையாடற் புராணம்
நூலாசிரியர் : பரஞ்சோதி முனிவர்

பனகல் அரசர் ராம ராயனிங்கவாரு **திருக்காளத்தி**

(1866—?) (ஆந்திர மாநிலம்)

மகர மைக்கடல் நிலவல யத்திடை வளங்கூர்
துகளில் சீர்த்திரு நாட்டினுள் தொண்டைநா டென்னத்
திகழ்ம ணிக்கணம் குயின்றெளிர் செம்பொன் நீள்மாடம்
நகரெ வற்றினும் சிறந்தது காளத்தி நகரம்.

நூல் . சீகாளத்திப் புராணம்
நூலாசிரியர் : சிவப்பிரகாச சுவாமிகள்

ரைட் ஹானரபிள் சீனிவாச சாஸ்திரி **வலங்கிமான்**

(1869— ?) (தஞ்சை மாவட்டம்)

CONNEMARA PUBLIC LIBRARY
31 JAN 1975
MADRAS

நனவிலுங் கன்விலு நாளுந் தன்னொளி
நினைவிலு மெனக்குவந் தெய்து நின்மலன்
கனைகடல் வையகந் தொழுக ருக்குடி
அனலெரி யாடுமெம் மடிகள் காண்மினே.

திருக்கருக்குடி—வலங்கிமான் நூல் : தேவாரம்
நூலாசிரியர் : திருஞானசம்பந்தர்

சர்தார் வேதரத்தினம் பிள்ளை **வேதாரண்யம்**

(1897—1961) (தஞ்சை மாவட்டம்)

நெய்த லாம்பல் நிறைவயல் சூழ்தரு
மெய்யி னூர்வலங் கொள்மறைக் காடரோ
தையல் பாகங்கொண் டீரகவர் புன்சடைப்
பைதல் வெண்பிறை பாம்புடன் வைப்பதே.

வேதாரண்யம் – திருமறைக்காடு நூல் : தேவாரம்
நூலாசிரியர் : திருநாவுக்கரசர்

டாக்டர் டி. எஸ். எஸ். ராஜன் **நாகப்பட்டினம்**

(தஞ்சை மாவட்டம்)

போக்குச் செற்ற புலவர்பல் லாண்டொலி
வாக்குச் சொக்க மறைமுழங் காநிற்கப்
பாக்குச் செற்றினி தாடுறும் பாலாக்கு
நாக்கு நற்றமிழ் பாடுநன் னுகையே.

நூல் : நாகைப் புராணம்
நூலாசிரியர் : மகாவித்வான் கோவிந்த பிள்ளை

தியாகி அண்ணாமலைப் பிள்ளை **திருவண்ணாமலை**

(? — ?) (வடார்க்காடு மாவட்டம்)

முக்கோண மாக முளைத்தமலை முண்டகமால்
அக்கோடு நாக மணிந்தமலை—திக்கோடு
துன்னுமலை தன்னைத் துதிக்குமடி யாருளத்தின்
மன்னுமலை அண்ணா மலை.

நூல் : அண்ணாமலை வெண்பா
நூலாசிரியர் : குரு நமச்சிவாய சுவாமிகள்

டாக்டர் பேரறிஞர் அண்ணா — **காஞ்சிபுரம்**

(1909—1969) — (செங்கை மாவட்டம்)

கச்சிமா நகரோர் தட்டும் கடவுளர் உலகோர் தட்டும்
வைச்சுமுன் அயனூர் தூக்க மற்றது மீது செல்ல
நிச்சய முறுகித் தாழ்ந்து நிலமிசை விழுமிவ் வூரை
இச்சகத் தூர்க ளோடும் எண்ணுதல் மடமைப் பாற்றே.

நூல் : காஞ்சிப் புராணம்
நூலாசிரியர் : திருவாவடுதுறைச் சிவஞான யோகிகள்

அமைச்சர் அன்பில் தருமலிங்கம் — **அன்பில்**

(? —1919) — (திருச்சி மாவட்டம்)

வெள்ள முள்ள விரிசடை நந்தியைக்
கள்ள முள்ள மனத்தவர் காண்கிலர்
அள்ள லார்வய லன்பிலா லந்துறை
உள்ள வாறறி யார்சில ருமரே.

அன்பிலாலந்துறை—அன்பில்

நூல் : தேவாரம்
நூலாசிரியர் : திருநாவுக்கரசர்

டாக்டர் கலைஞர் கருணாநிதி — **திருக்குவளை**

(4-6-1924) — (தஞ்சை மாவட்டம்)

நீதி யாற்றொழு வார்கள் தலைவனை
வாதை யானவி டுக்கு மணியினைக்
கோதி வண்டறை யுந்திருக் கோளிலி
வேத நாயகன் பாதம் விரும்புமே.

நூல் : தேவாரம்
கோளிலி-திருக்குவளை — *நூலாசிரியர் : திருநாவுக்கரசர்*

தொகுத்தவர் : சுரதா

வருகிறது!

நாக தோசத்தை நிவர்த்தி செய்யும்
நல்லதொரு குடும்பப் படம்.

செந்தில் குமார் புரொடக்ஷன்ஸ்

வசனம், பாடல்கள்
புரட்சிதாசன்

டைரக்ஷன்
***K. S.* ராமதாஸ்**

செந்தில் குமார் புரொடக்ஷன்ஸ்

39, போக் ரோடு, சென்னை-17.

போன் : 443625

மற்றவர்க் கெல்லாம்
வழிகாட்டி யாக
வாழ்ந்த சிதம்பரம்
பிள்ளைக்கு வணக்கம்!
பூக்களுள் தாமரைப்
பூவுக்கே முதலிடம்
தருதல்போல் பட்டு
சவுளிக்கே ழுதலிடம்
தந்தும், மற்ற
சவுளிகட் கெல்லாம்
எதுகைபோல் இரண்டாம்
இடத்தினைத் தந்தும்
சங்க மதுரையில்
தலைசிறந்து விளங்கும்
நல்ல துணிக்கடை
நடராஜா ஸ்டோர்க்கு
வருகை தருக!
வாங்கி உடுத்துக!
நடராஜா ஸ்டோர்
அனைத்து ஜவுளிகள்
நிறைந்த ஒரே கடை.
போன்:- 22408.
92, அம்மன் சன்னதி, மதுரை.
ராஜம்...

இந்திய துணைப்பெருங்கண்டத்தின் ஈடு இணையற்ற சிங்கம்
எத்திக்கும் போற்றும் நற்குடித் தோன்றல்

வாழ்க! வீரர் வ. உ. சி!!

**காஞ்சியில் தலைசிறந்த பட்டுச் சேலை
உற்பத்தி நிறுவனம்**

***காஞ்சிபுரம் முருகன் பட்டு நெசவாளர் கூட்டுறவு
உற்பத்தி விற்பனைச் சங்கம் லிமிடெட்.,***

நெ. ஜி. *1653*

***79,* காந்தி ரோடு, காஞ்சிபுரம்-1**

போன் : 201

18 ஆண்டுகளாக பொதுமக்கள் விரும்பிய வண்ணம் புதுப்புது ரகங்
களில் காஞ்சிபுரம் பட்டாடைகள் கண்கவரும் வண்ணம்
தயாரித்து அவர்களின் நல்லாதரவைப் பெற்ற
நிறுவனம்.

தந்தி : "KAMAXI SILK" PHONE : No. 202

**காஞ்சிபுரம் காமாட்சியம்மன் பட்டு கைத்தறி நெசவாளர்
கூட்டுறவு உற்பத்தி விற்பனைச் சங்கம் லிட்., *No. G.* 1612.**

168-A, காந்தி ரோடு, காஞ்சிபுரம்.

கிளை விற்பனை நிலையம்

27, இரண்டாவது அக்ரஹாரம், சேலம்.

A. சோணாசலம், — *கைத்தறி அலுவலர் செயலாளர்*

K. S. பார்த்தசாரதி — *தலைவர்*

இயக்குனர்கள் :

திரு. **K. V.** கோவிந்தராஜிலு (*உபதலைவர்*)
,, **A. K.** ஆழ்வார் **S.** துரைசாமி செட்டியார் **K.** ஏழுமலை கிராமணி
,, **C.** சுப்பராயன் **M. V.** சேஷாசலம் செட்டியார்.

தமிழிசைப் பாட்டு

வென்றிடுவேன் காலால் மிதித்து!

என்மனமும் என்னுடலும் என்சுகமும் என்அறமும்
என்மனையும் என்மகவும் என்பொருளும்-என்மனமுங்
குன்றிடினும் யான்குன்றேன் கூற்றுவனே வந்தாலும்
வென்றிடுவேன் காலால் மிதித்து.

—வ. உ. சி,

பசையற்றுப் போனோமடா!

காலுக்குச் செருப்புமில்லை
கால்வயிற்றுக் கூழுமில்லை
பாழுக் குழைத்தோமடா—என்தோழனே
பசையற்றுப் போனோமடா!

—ஜீவானந்தம்

சாராய சகாப்தம்!

ஆகஸ்டு பதினைந்தொரு விழாவல்ல
ஆகஸ்டு முப்பதே தமிழ்நாட்டு விழா
தாழ்ந்தவர் உயர்ந்தவர் மதுவிலக்கு வந்ததும்
வீழ்ந்தவர்கள் முன்போல் வாட
ஆழ்ந்த அறிஞர் அண்ணாவை மறந்துவிட்டு
வள்ளுவர் வாக்கைக் காற்றிலே பறக்கவிட்டு
வரம்பெற்றுப் பதவியடைந்த கருணையார்
கள்ளும் சாராயமும் தந்தார்.
அரங்கேற்றினார் கடைகளை ஆயிரக் கணக்கில்.
போற்றுக முதல்வர் பணியை......

—ராஜாஜி

தெரிந்த தலைவர்கள்

அறநெறி !

நாடெலாம் வளர நல்குர வொழிய
ஞானமா நெறியெலாந் தழைக்க
ஆடவர் மகளிர் அன்பினில் திளைக்கும்
அறநெறி ஓங்குதல் வேண்டும்.

—திரு. வி. க.

நாதியற்றுப் போனீரோ ?

ஏதிலார் வைத்தசிறை ஈமச் சுடுகாடோ?
நாதியற்றுப் போனீரோ நல்லுலகில்—கோதிலா
ஆகாகான் மாளிகையோ அந்தோ! உமைவிழுங்கும்
மாகாலன் மாளிகையோ மற்று!

—ம. பொ. சி.

இங்கிருக்கும் சுதந்திராக்கள் ?

'சாராய சகாப்த' மென்ற ஓர்கவிதை
சக்கரவர்த்தி ராஜாஜி மாமுனிவர்
தாராளமாய்க் 'கல்கி' ஏட்டில் தீட்டியதால்
யார்யாரோ சுதந்திராக்கள் மகிழுகின்றார்.
'பார் பாராய்க்' குடித்தவர்கள் பர்மிட் வங்கி!
நேர்மாறாய்ப் பேசுகின்றார் புத்தர் போல!
இதயத்தில் நோய்என்றும்
இருயூனிட் வேண்டுமென்றும்
இதோ 'டாக்டர் சர்டிபிகேட்' பாருமென்றும்
இங்கிருக்கும் சுதந்திராக்கள்
குடித்த கதை ஊரறியும். ....

—டாக்டர் கலைஞர் கருணாநிதி.

அண்ணாவின் வழியில் அயராது உழைப்போம்.

கண்ணைக் கவரும் வண்ண வண்ண பட்டுச் சேலைகள்,
டிஷ்யூ சேலைகள், பாவாடைகள், பீஸ் ரகங்கள்
கிடைக்குமிடம்.

அறிஞர் அண்ணா பட்டு கைத்தறி நெசவாளர்
கூட்டுறவு உற்பத்தி விற்பனைச் சங்கம் லிட்.,

K. H. I.

498, காந்தி ரோடு, காஞ்சிபுரம்.

P. R. காசிநாதன் B.A;
கைத்தறி அலுவலர்-செயலர்.

சு. திருவேங்கடம்.
தலைவர்.

இயக்குநர்கள் :

C. K. வஜ்ஜிர வேலு (*துணைத் தலைவர்*)
T. K. கோவிந்த ராஜி
V. திருமலை
K. கோவிந்த ராஜி
A M. முத்து குமாரசாமி
P. V. ஜெயராமன்

தொலைபேசி : 627

கண்கவர் வண்ணங்களில் புதுமையான ரகங்களில் அசல்
காஞ்சிபுரம் பட்டுச் சேலைகள், பாவாடைகள்,
சோளி ரகங்கள் வாங்க சிறந்த கூட்டுறவு
ஸ்தாபனம்

ஸ்ரீ வரதராஜ ஸ்வாமி பட்டு கைத்தறி நெசவாளர்
கூட்டுறவு உற்பத்தி விற்பனைச் சங்கம் லிட்.,

எண் ஜி. 2105

81-82, காந்தி ரோட், காஞ்சிபுரம்-1

R. வாசுதேவ மூர்த்தி
கைத்தறி அலுவலர்-செயலர்

K. N. ராமுடு
தலைவர்

உ

திருச்சிற்றம்பலம்

மகா-ள-ள-ஸ்ரீ வ. உ. சிதம்பரம் பிள்ளை

அவர்களுக்கு,

ஐய,

தாங்கள் இச்சங்கத்தின் கல்வி அங்கத்தினருள் ஒருவராயமர்ந்து செந்தமிழ்ப் பாஷாபி விர்த்திக்கு வேண்டுவன வற்றைப் புரிதற்கு மனமுவந்து வரவிடுத்த சம்மதப் பத்திரிகையைக் கண்ணுற்றுப் பெருமகிழ் வெய்தினேன் இவ்வாறு அன்புகூர்ந்து முன்வந்து வாக்குதவிய தங்கட்கு அநேக வந்தனம் அளிக்கின்றேன்.

இங்ஙனம்,

பாண்டித்துரை

அக்கிராசனாதிபதி

பற்களின் பாதுகாப்பிற்கு

"அட்லாஸ் பல்பொடி"

பாக்கெட் விலை 10 பைசா

எங்கும் விற்பனையாளர்கள் தேவை.

விவரங்களுக்கு :

அ. தமிழரசு

12, மாரியம்மன் கோவில் தெரு,

பழனி (அஞ்சல்)

மதுரை (மாவட்டம்)

தென்னகத்தின் "தியாகச் சுடர்"

செக்கிழுத்த செம்மல்

தியாக உரமேறிய மாவீரர்

"சிதம்பரம் பிள்ளை" திருநாமம்

வாழ்க! வாழ்க!! என வாழ்த்தும்

"லக்ஷ்மி சோப்"

38-39, அம்மன் சன்னதி, மதுரை—1

தொலைபேசி : 26955 தொழிலகம் : 25257

பளிச்சென்ற சலவைக்கும்,

லக்ஷ்மி கரமான ஸ்நானத்திற்கும்

"லக்ஷ்மி சோப்"

தமிழகத்தின் தன்னிகரில்லா ரகங்கள்.

—*ராஜும்*

தமிழர்களே கேளுங்கள்!

சாதாரண மக்கள் என்னைச் சமுத்திரம் என்பார்கள். ஆனால், புலவர்களோ என்னைப் 'புணரி' என்றும், 'ஆர்கலி' என்றும் அழைப்பார்கள்.

நான், உப்புக்குத் தாய். கப்பலுக்குத் தண்ணீர் வீதி. இயற்கைப் பள்ளத்திலே கிடந்து, ஓயாமல் இருமிக் கொண்டே இருக்கும் இருண்ட கடல்!

என்கதை இருக்கட்டும். உங்கள் முன்னோர்களைப் பற்றிச் சுருக்கமாக இரண்டொரு செய்திகளைச் சொல்லுகிறேன் கேளுங்கள்.

வடிம்பலம்ப நின்ற பாண்டியன்

பாண்டியன் நெடியோன் என்பவன், பழந்தமிழ் நாட்டை ஆட்சிபுரிந்த ஒப்பற்ற மன்னர்களுள் ஒருவன். ஞானமும் கல்வியும், நிதியும் செல்வமும் நிரம்பப் பெற்றிருந்தவன். என்னால் விழுங்கப்படாத பழந்தமிழ் நாட்டின் வடவெல்லையிலே ஓடிக்கொண்டிருந்த பஃறுளி ஆற்றை ஒழுங்கு படுத்தியவன். மிகச் சிறந்த வீரனாகவும் வள்ளலாகவும் விளங்கியவன்.

ஒரு நாள், நான் கோபங்கொண்டு கொந்தளித்துப் பொங்கி எழுந்தேன். என்மீது தோன்றிய அலைகளின் ஆரவாரத்தைக் கண்டஞ்சி அனைவரும் ஓடினர். ஆனால் பாண்டியன் நெடியோன்மட்டும் ஓடவில்லை. அஞ்சா நெஞ்சத்துடன் அப்படியே நின்று கொண்டிருந்தான்.

நான்தான் அவனைக் கண்டு அஞ்சினேன். அவனது கால்களை என் உப்புத் தண்ணீரால் கழுவிவிட்டு, நானேதான் தோல்வியோடு திரும்பினேன்.

அவன் அஞ்சாமையைக் கண்டு வியப்படைந்த புலவர்கள், அவனை "வடிம்பலம்ப நின்ற பாண்டியன்" என்று பாராட்டினர்.

கடல் கொந்தளித்துப் பொங்கிய நேரத்திலும் அஞ்சாமல் நின்று, அப்பேரலைகளின் நுரை விளிம்புகளால் தன் கால்கள் கழுவப் பெற்றவன், அதாவது "வடிம்பலம்ப நின்றவன்" என்னும் காரணச் சிறப்புப் பெயரை இவ்வுலகில் அவனைத் தவிர, வேறுயாருமே இதுவரை பெற்றதில்லை!

கடல்பிறக் கோட்டிய செங்குட்டுவன்

சேரன் செங்குட்டுவன் காலத்தில் மேலைக் கடலின் நடுவே, சில தீவுகளில் சிற்றரசர் சிலர் ஆட்சிபுரிந்து வந்தனர். அவர்கள் அடிக்கடி சேரநாட்டுக்குத் தொல்லை கொடுத்துக் கொண்டே இருப்பதைக் கண்ட செங்குட்டுவன், அவர்களை அடக்கிவரக் கப்பற்படையோடு புறப்பட்டான்.

மேலைக் கடலின் ஆழத்தையும், அதன் பரப்பையும், அலைகளின் ஆர்ப்பாட்டத்தையும் கண்டு அவன் கொஞ்சமும் அஞ்சாமல், அவை தன் பின்னே செல்லக் கடலில் முன்னேறிச் சென்று பகைவர்களை முடியடித்தான்.

கலத்திலேறிச் செல்லும் போது, அக்கடல் அவனுக்குத் தடையாக நிற்கவில்லை. அதற்கு மாறாகப் புறங்காட்டி ஓடும் பகைவர்களைப் போல் அவனுடைய மரக்கலங்கள் விரைந்து செல்ல அது வழிவிட்டது. ஆதலின், கடலைப் பிறக்கிடும்படி ஓட்டினவன் என்னும் சிறப்புப் பெயரை அவன் பெற்றான்.

கப்பலோட்டிய தமிழன்

சுதேச வியாபாரிகள் அந்நிய கப்பல் கம்பெனியில் அவமதிக்கப்படுவதையும், பெரும் பொருள் இழப்பதையும் கண்ட வ. உ. சி. அவர்கள், பலருடைய பொருளுதவியைக் கொண்டு 'சுதேசிக் கப்பல் கம்பெனி' ஒன்றைத் தோற்றுவித்து, வெள்ளையருக்கு எதிராகக் கப்பல் விட்டார்.

ஆங்கிலேயருக்கு எதிராகவும், தேசிய நோக்கத்தோடும் இந்தியாவிலேயே முதன் முதல் கப்பல் ஓட்டியவர் என்னும் காரணத்தால், வ. உ. சி. அவர்கள் கப்பலோட்டிய தமிழன் என்று அழைக்கப்படுகிறார்.

—[illegible]

எண்ணெயும் ⟷ தண்ணீரும்

எண்ணெயும் நமக்குப் பயன்படுகிறது. தண்ணீரும் நம் தாகத்திற்கு உதவுகிறது. ஆனால், அவை இரண்டும் ஒன்று கலந்து உறவாடுவதில்லை. அதுபோலவே இவர்களும்......

பாவலர் உலகத்துப் பகைவர்கள் :

கம்பன்	வாணியன்தாதன்
காளமேகம்	அதிமதுரகவி
அருணகிரிநாதர்	வில்லிபுத்தூராழ்வார்
எல்லப்ப நயினார்	பரமேச்சுரப் புலவர்
படிககாசுப் புலவர்	கும்பகவி
பலபட்டடைச் சொக்கநாதப் புலவர்	சுப்பிரதீபக் கவிராயர்
பொன்னுயிரங் கவிராயர்	சந்திராமுத கவிராயர்

மறுத்து வாதிட்ட மதவாதிகள் :

தாத்தாசாரி	அப்பைய தீக்ஷிதர்
சிவாக்கிர யோகிகள்	மணவாள மாமுனி
இராமலிங்க அடிகள்	ஆறுமுக நாவலர்
சோமசுந்தர நாயகர்	புதுவை இராமாநுச நாவலர்
திக்விஜயம் எம்பாவையங்கார்	வீரபத்திரா ராத்யர்
நா. கதிரை வேற்பிள்ளை	கோ. வடிவேலுச்செட்டியார்
பஞ்சாங்கம் கிருஷ்ணமாசாரி	புதுக்கோட்டை வெங்கட சுப்பாச்சாரி

எதிர்த்து எழுதிய எழுத்தாளர்கள் :

கிருஷ்ணசாமிப் பாவலர்	கைவல்ய சாமியார்
டி. எஸ். சொக்கலிங்கம்	மணவை. ரெ. திருமலைசாமி
கல்கி	புதுமைப் பித்தன்

அந்தநாள் அரசியல் பகைவர்கள் :

ராஷ்பிகாரி கோஷ்	திலகர்
கோகலே	வ உ சி.
சுரேந்திரநாத்	அரவிந்தர்
தூத்துக்குடி ரெங்கசாமி ஐயங்கார்	சக்கரைச் செட்டியார்

இந்தநாள் அரசியல் எதிரிகள் :

காமராசர்	இந்திரா காந்தி
மொரார்ஜி தேசாய்	ஜகஜீவன்ராம்
நிஜலிங்கப்பா	பக்ருதீன் அலி அகமத்
சஞ்சீவி ரெட்டி	சி. சுப்பிரமணியம்
அதுல்யகோஷ்	வி. பி. நாயக்
ராம்சுபாக் சிங்	மோகன்லால் சுகாதியா
சி. பி. குப்தா	உமாசங்கர் தீக்ஷித்
ஹிதேந்திர தேசாய்	சாதிக அலி

கி. பி. 50-ல்

குடவாயிற் கோட்டத்துச் சிறையில்

குழவி இறப்பினும் ஊன்றடி பிறப்பினும்
ஆளன் றென்று வாளிற் றப்பார்
தொடர்ப்படு ஞமலியின் இடர்ப்படுத் திரீஇய
கேளல் கேளிர் வேளாண் சிறுபதம்
மதுகை யின்றி வயிற்றுத்தீத் தணியத்
தாமிரந் துண்ணு மளவை
ஈன்ம ரோவிவ் வுலகத் தானே.

—சேரமான் கணைக்காலிரும்பொறை

[கணைருனே! காகிதப்பூச் சோழனே! உன் ஆட்சியை நான் கட்டாயம் கவிழ்த்தே தீருவேன் என்று கொக்கரித்துக் கொண்டிருந்த இச்சேர மன்னன், கழுமலப்போரிலே சோழன் செங்கணனிடம் தோல்வியுற்றுக் குடவாயிற் கோட்டத்துச் சிறையில் இருந்தபோது பாடிய பாடல் இது.]

7-ஆம் நூற்றாண்டில்

பாடலிபுத்ரச் சிறையில்



மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே.

நமச்சி வாயவே ஞானமுங் கல்வியும்
நமச்சி வாயவே நானறி விச்சையும்
நமச்சி வாயவே நாநவின் றேத்துமே
நமச்சி வாயவே நன்னெறி காட்டுமே.

வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்
தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனைச்
சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே
வீழ்த்த வாவினை யேனெடுங் காலமே.

நெக்கு நெக்கு நினைபவர் நெஞ்சுளே
புக்கு நிற்கும்பொன் னார்சடைப் புண்ணியன்
பொக்க மிக்கவர் பூவுநீ ருங்கொண்டு
நக்கு நிற்ப ரவர்தமை நாணியே.

விறகிற் றீயினன் பாலிற் படுநெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
உறவு கோல்நட் டுணர்வு கயிற்றினால்
முறுக வாங்கிக் கடையமுன் நிற்குமே......

—திருநாவுக்கரசர்

[நாற்பத்தொன்பதாயிரம் பதிகங்களைப் பாடிய இந்த நாவுக்கரசரை, மன்னன் மகேந்திரவர்ம பல்லவன் சூடேறிக் கொதிக்கும் சுண்ணாம்புக் காளவாயில்-அதாவது நீற்றறையில் இட்ட நேரத்திலே இவர் பாடிய பதிகம் இது.]

13-ஆம் நூற்றாண்டில்

சோணாட்டுச் சிறையில்

மானவ னானந்த வாளரி வேங்கையும் வற்றிச் செத்த
கானவ னானந்த வெரியுந் தழலுங் கனைகடலின்
மீனவ னானந்த வெங்கட் சுறவமும் வீசுபனி
தானவ னானக் கதிரோ னுதயமுந் தார்மன்னனே!

—புகழேந்திப் புலவர்

[சோழன் ஒருநாள் யானைமீது பவனி வந்துகொண்டிருந்தான். அக்காட்சியைச் சிறையிலிருந்து பார்த்துக்கொண்டிருந்த புகழேந்திப் புலவரைச் சோழமன்னன் ஒட்டக்கூத்தர்க்குச் சுட்டிக் காட்டி, "இப்புலவர் சிறந்தவரன்றோ?" எனக் கேட்க, அதற்கு விடையாக உடனே ஒட்டக்கூத்தர், "மான்நிற்குமோ இந்த வாளரிமுன்" என்னும் பாடலைப் பாடுகையில், புகழேந்திப் புலவர் சோழனை நோக்கிக் "காவலனே! இக்கவியை வெட்டிப் பாடவோ? ஒட்டிப் பாடவோ? என்று கேட்க, "ஒட்டிப் பாடுக!" என்று சோழன் சொன்னபோது இப்புலவர் பாடிய பாடல் இது.]

17-ஆம் நூற்றுண்டில்

திருநெல்வேலிச் சிறையில்

செய்வதொன் றறிகிலேன் செழுமென் போதுதான்
பெய்வதொன் றறிகிலேன் பேதை யேன்சுடர்
வைதிகழ் வேற்படை முருக என்தனை
கொய்தெனக் கிரங்கியாட் கொள்ள வேண்டுமால்.

—குருகையூர் வைணவப் புலவர்

[திருநெல்வேலியில் ஆட்சிபுரிந்த வடமலையப்பன் என்னும் சிற்றரசன், சமயவெறுப்பின் காரணமாக இவரைச் சிறையிட்டபோது வருந்திப் பாடிய பாடல் இது.]

18-ஆம் நூற்றாண்டில்

சிவகங்கைச் சிறையில்

நாட்டில் சிறந்த திருமலையா! துங்க நாகரிகா!
காட்டில் வனத்தில் திரிந்துழ லாமல் கலைத்தமிழ்தேர்
பாட்டில் சிறந்த படிக்காச னென்னுமோர் பைங்கிளியைக்
கூட்டில் அடைத்துவைத் தாயிரை தாவென்று கூப்பிடுதே.

—படிக்காசுப் புலவர்.

[சிவகங்கையிலே வாழ்ந்திருந்த திருமலைத்தேவர் என்பவரால் இப்புலவர் கிளிக்கூண்டுச் சிறையில் அடைக்கப்பட்டு வருந்திக் கொண்டிருக்கையில், ஒரு நாள் மாலைப்பொழுதில் சிறைக்கருகிலே உள்ள பூங்காவில் உலவிக் கொண்டிருந்த திருமலைத் தேவரைப் பார்த்து இப்புலவர் பாடிய பாடல் இது.]

20-ஆம் நூற்றாண்டில்

கண்ணனூர்ச் சிறையில்

சுவாமியே! தந்தையே! தூயநற் பெரியோய்!
அவாவியே வந்தெனை ஆண்டருள் ஈசா!
மூன்றிரு திங்கள் முரண்சிறை இருந்தேன்;
இந்த வாரம் எடுத்த நிறுவையில்
ஐந்தி லொன்றாக அருகிய தென்னுடல்
அரிசி உணவுக்கு அளித்தனன் அனுமதி
பெரியவன்; மற்றவன் பேசான் என்றொடு.
சீரிய நின்னடி சிரமேற் கொண்டுயான்
பாரிய என்னுளப் பாரதத் தாய்க்கும்
உரிமையொடு பெற்றெனை உவப்பொடு வளர்த்த
பெருமைசேர் அன்னைக்கும் பிறர்க்கும் எனது
மெய்மன வாக்கால் விரும்பிஇன் றளித்தேன்
தெய்வ வணக்கமும் சீர்தரும் வாழ்த்துமே.

—வ. உ. சி.

[காந்தியும் நேருவும், கவிதை வடிவில் யாருக்கும் கடிதம் எழுதிய தில்லை. ஆனால், இந்தியப் பெருந்தலைவர்களுள் ஒருவரான வ. உ. சி. அவர்களோ, பெரும்பாலும் கவிதை வடிவிலேயே பிறர்க்குக் கடிதங் கள் எழுதி வந்தார். இவர், கண்ணனூர்ச் சிறையில் இருந்தபோது, தம் தந்தைக்குக் கவிதை வடிவில் எழுதிய கடிதம் இது.]

Phone : 88219

RAYAN & CO.

BLOCK MAKERS,

698, Triplicane High Road,

MADRAS-5.

Phone : Office : 71236
Res : 72802

BHARATHI ELECTRIC SOUND SERVICE

PUBLIC ADDRESS SYSTEM ILLUMINATIONS &

WIRING CONTRACTORS

T. K. KAPALI
Proprietor

1/4, St. Marys Road,
MADRAS-28.

உ

ஸ்தாபிதம் 1920. போன்: 405, 406.

பழநி பரிமள விலாஸ்

S. சித்தனாதன்

ஜவ்வாது வாசனை விபூதி

ஸ்பெஷல் பஞ்சாமிர்தம்

சிறந்தது.

S. சித்தனாதன் சன்ஸ், அடிவாரம், பழநி.

சிங்கத் தமிழன் சிதம்பரனார் நூற்றாண்டு விழா
மங்களச் செய்தி கேட்டு உள்ளமெல்லாம்,
உயிரெல்லாம் மகிழ்ச்சியால் நினைக்கும்,

இ. ரெங்கசாமி

ஆசிரியர்: "யாதவ மித்திரன்"

23, செம்பி கிணற்றுத் தெரு,

மதுரை-1. போன்: 26489

"யாதவ மித்திரன்"

(திங்கள் இதழ்)

ஆண்டுச் சந்தா ரூ. 3-00

ராஜம்—



நாலடியார் : 1855-ல்

மகாவித்வான் இராமானுச கவிராயரிடம் கல்வி பயின்று, அக்கவிராயரால் நிறுவப்பட்ட தமிழ் இலக்கியச் சங்கத்தின் தலைவராக இருந்த வேதகிரி முதலியார் அவர்கள், சூடாமணி நிகண்டின் பதினோராவது பகுதிக்கு உரை எழுதி 1843-இல் அச்சிட்டார். திருக்குறளுக்கு உரை எழுதி 1849-இல் அச்சிட்டார். யாப்பருங்கலக் காரிகையை 1851-இல் அச்சிட்டார். பகவத் கீதையை 1852-லும், நாலடியாரை 1855-லும் அச்சிட்டார். நைடதத்திற்கு உரை எழுதி 1859-இல் அச்சிட்டார்.

நாலாயிர திவ்ய பிரபந்தம் : ?

சென்னையில் சிறப்புற்றுப் பெருந்திருவோடு 19-ஆம் நூற்றாண்டில் விளங்கியவர் முடிச்சூர் அப்பாவு முதலியார் என்பவர். அவர் காலத்தில் அச்சியந்திரம் தோன்றிச் சைவ சமய குரவர்கள் அருளிய தேவார திருவாசகங்கள் அச்சில் வெளி வந்தும் ஆழ்வார்கள் அருளிச் செய்த நாலாயிர திவ்ய பிரபந்தம் அச்சில் வாராமை கண்டு, அதனைத் தாமே அச்சில் பதிப்பிக்கக் கருதித் தம் கருத்தைத் தக்க அந்தணர்பாற் றெரிவித்தார்.

அவர்களோ, 'நாலாயிர திவ்ய பிரபந்தம்' எனும் அரும்பெரும் நூலானது, "ஓர் இரகசிய கிரந்தம்" ஆகவே, அதனை 'ஓராண்வழி' எனும் பரம்பரை மூலம் கேட்டுணர்தல் வேண்டுமேயன்றி, அச்சு மூலம் வெளிக் கொணர்தல் தகாதெவும் கொணரின் அதன் பெருமதிப்பழிந்துபடும் எனவும் கூறி மறுத்து விட்டனர்.

இதனைச் செவியுற்ற இவர், இப்பிரபந்தம் முழுதும் வேறு குலத்தினர்பால், கிடைப்பதரிதாகலானும், அவ்வந்தணர் பெருமக்களிடமிருந்தே பெறவேண்டுதலானும், அவர்கள் தாம் தங்கருத்துக்கிசையாமையானும் மிகவும் நொந்தவராய் என் செய்யலாம் என ஆராய்ந்து கலங்கிய உள்ளத்தராய்ப் பின் ஒருவாறு தேறி ஒருவழிகண்டுபிடித்தார்.

அதன்படி, பணச்செலவைக் கருதாமல் அவ்வந்தணப் பெருமக்கட்கு அளவின்றிப் பெருந்தொகை ஈந்து, ஒருவர்க்கொருவர் அறியாதபடி பல்லோரிடத்தும் சென்று, அவ்வவர்கள் வாயில் காத்துப் பகலென்றும் இரவென்றும், மழையென்றும் வெயிலென்றும் பாராமல் மிகுந்த சிரமப்பட்டுப் பொதுவாகத் தமிழுக்கும் சிறப்பாக வைணவர்கட்கும் ஒரு பெருங் கருவூலமாகிய 'நாலாயிர திவ்ய பிரபந்தத்தை' உருவாக்கி அச்சிட்டு வெளிப்படுத்தினார்-என்று, ஏ. வே. இராமநுஜ நாவலர் சரித்திரச் சுருக்கம் என்னும்நூலில், வி. பூதூர்—புலவர் கி. வேங்கடசாமி ரெட்டியார் குறிப்பிடுகிறார்.

சீவக சிந்தாமணி : 1883-ல்

சிந்தாமணியின் முதல் ஐந்து இலம்பகங்கள் மூலபாடமாக 1883-ஆம் ஆண்டில் புதுக்கோட்டை சமஸ்தான வித்துவான் ப. முருகேச கவிராயர் சகோதரராகிய ப. அரங்கசாமி பிள்ளையவர்களால் பல பிரதி ரூபங்களைக் கொண்டு பரிசோதிக்கப் பெற்று, சென்னபட்டணம் அஷ்டலட்சுமி விலாச அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது. இதன் முகப்புப் பக்கத்தில் முதற்பாகம் என்று காணப்படுதலால், இரண்டாம் பாகமொன்று வெளிப்படுத்தி, பதிப்பைப் பூர்த்தி செய்ய வேண்டுமென்ற கருத்து பதிப்பாளருக்கு இருந்ததென்று கொள்ளக் கிடக்கிறது. ஆனால் இவ்விரண்டாம் பாகம் வெளிவந்ததாகத் தெரியவில்லை.

இவ்வாறாக ஆபூர்த்தியான பதிப்புக்கள் வெளிவந்தனவே யொழிய, நூல் முழுதும் அடங்கிய பதிப்பு வெளிவரவில்லை. 1887-ஆம் ஆண்டில் மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள் நூல் முழுவதும் அடங்கிய பதிப்பு வெளியிட்டார்கள்'-என்று, சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் செயலாளர் ம. பாலசுப்பிரமணியன் தம் நூலில் குறிப்பிடுகிறார்.

திருப்புகழ்: 1894-ல்

நான், பாடல்களைச் சேகரஞ் செய்யுங் காலத்தில் தங்களிடமிருந்த பிரதிகளைத் தந்த புண்ணியவான்களுக்கும், பிறரிடத்திருந்தவைகளை வருவித்துத் தந்த அன்பர்களுக்கும் அநேக வந்தனம் அகமகிழ்ந்தளிக்கிறேன். இவர்களிற் கருங்குழி-ஞானப் பிரகாச ஐயரவர்களுடைய குமாரராகிய ஆறுமுக ஐயரவர்களை முக்கியமாகச் சொல்ல வேண்டும்.

சேகரமான ஆயிரத்திருநூறு பாடல்களையும் அச்சிட்டு முடிந்த பின்பு ஒரே புத்தகமாக்கி வெளிப்படுத்த உத்தேசித்திருந்தேன். அச்சிடத் தொடங்கி இரண்டு வருஷ காலமாகியும், பலவித அசந்தர்ப்பத்தால், இதுவரையில் அறுநூறு பாடல்களே அச்சிட்டு முடிந்தன. மற்றை அறுநூறு பாடல்களையும் அச்சிட்டு முடிக்க எப்படியும் இன்னும் இரண்டு வருஷம் செல்லும். அவ்வளவு காலம் புத்தகத்தை வெளிப்படுத்தாமலிருப்பது யுக்தமாகத் தோற்றவில்லை.

இதனை அச்சிடத் தொடங்கினபின்பு அச்சிடும் விஷயத்தில் சென்னையில் எனக்கு உதவி புரிந்துவந்த ம-ா-ா-ஸ்ரீ தணிகாசல நாயகரும், திருப்புகழ்ப் பாடல்களைச் சீர்திருத்தி ஒழுங்குபடுத்தின திருப்பாதிருப்புலியூர் ம-ா-ா-ஸ்ரீ சிவசிதம்பர முதலியார் அவர்களும் சிவபதமடைந்தார்கள்.

இவ்வறுநூற்று மூன்று பாடல்களையும் இப்போது முதற்பாகமாக வெளிப்படுத்தியிருக்கின்றேன். மற்றை ஸ்தலங்களின் பாடல்களும் பொதுப்பாடல்களும் சேர்ந்து அறுநூறு பாடல்களாகும். அவற்றை இரண்டாம் பாகமாக விரைவில் வெளிப்படுத்த முயலுகிறேன். ஆறுமுகக் கடவுள் அநுக்கிரகிப் பாராக.

வ. த. சுப்பிரமணிய பிள்ளை

(தஞ்சாவூர் ஜில்லா, திருத்தருப் பூண்டி, ஜய ஞு ஆவணிமீ 1894-ஞு செப்டம்பர் மீ)

இலக்கண விளக்கம்: 1900-ல்

சகல சற்குணமும் எல்லாக் கல்விச் சிறப்புமுடையராய் வீற்றிருந்து இப்பொழுது அடைந்துபோன பரமதயாளுவாகிய ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணியதேசிகமூர்த்திகள் இலக்கணவிளக்கம் அச்சில் வெளிப்படுமாயின் மீளவும் முன்னைச் சிறப்பு அடையாமற் போகாதென்று சொல்லி, அதனை எவ்வாற்றானும் அச்சிடுவிக்க வேண்டுமென்று அடியேற்குக் கட்டளையிட்டருளியது.

மேலும் சிறுகாப்பியங்களில் ஒன்றாகிய சூளாமணி இப்பொழுது எங்ஙனும் கிடைத்தற்கு அரிதாகி இறந்து போகுந் தசையடைந்திருத்தலால் அதனையும் அச்சிடுவித்தல் உலகிற்குபயோகமாகுமென உத்தரவு செய்தது.

உலகோபகாரமுந் தமிழ்ப்பரி பாலனமுங் கருதி இந்நூலை அச்சிடும்படி திரவிய சகாயஞ் செய்து அடியேனை ஆதரித்த போடி நாயக்கனூர் ஜமீன்தார் ஸ்ரீ திருமலை போடய காமராச பாண்டிய நாயக்கர் துரையவர்களுக்குப் பெருங் கடமைப் பட்டுள்ளேன். துரையவர்கள் வாய்மொழி தவறாது நிறைவேறச் செய்ய உடன்பட்டிருக்கும் அவர் தேவியராதியானோர்க்கு மிகவும் வந்தனங் கூறுகின்றேன்.

சி. வை. தாமோதரம் பிள்ளை

(தொண்டமான் புதுக்கோட்டை, ஞு1900)

தொல்காப்பியம்
இளம்பூரணர் உரை: 1928-ல்

தொல்காப்பியத்தைப் படிக்கும் பாக்கியம் எனக்கு 1910-ம் வருடம் கிடைத்தது. அதன் பொருளதிகாரத்தை யான் படித்தபோது, அதில் வேறு எம்மொழி இலக்கணத்திலும் காணப்படாத நிலப்பாகுபாடு, செடிகள், மலர்கள், மக்களது ஒழுக்கங்கள், பழக்க வழக்கங்கள் முதலியன கூறப்பட்டிருக்கக்கண்டேன். இவ்வொப்புயர்வற்ற நூலைத் தமிழ்மக்கள் படியாததற்கு ஒரு காரணம் இந்நூலிற்கு ஆன்றோர் இயற்றியுள்ள உரைகளின் கடின நடையென்று உணர்ந்தேன். இந்நூலைத் தமிழ்மக்கள் யாவரும் கற்கும்படி எளிய நடையில் ஓர் உரை எழுதவேண்டுமென்று நினைத்தேன்; உடனே எழுத்ததிகாரத்தின் முதற்சில இயல்களுக்கு உரையும் எழுதினேன்.

பின்னர், யான் சென்னை-பிரம்பூரில் வசித்த காலத்தில் என் உரையைப் பூர்த்தி செய்யக் கருதி முன் எழுதியிருந்த எழுத்ததிகார இயல்களின் உரையைத் திரு. தி. செல்வக் கேசவராய முதலியார் (எம். ஏ.) அவர்களும் யானும் சரிபார்த்தோம். அப்போது தொல்காப்பிய இளம்பூரண எழுத்ததிகார அச்சுப்புத்தகமும், சொல்லதிகார ஏட்டுப்பிரதிகள் சிலவும் பொருளதிகார ஏட்டுப் பிரதியொன்றும் திரு. த. கனக சுந்தரம் பிள்ளை (பி.ஏ.) அவர்களிடமிருந்து கிடைத்தன. இளம்பூரணத்தை யான் படித்தபோது அதன் உயர்வும், சிறப்பும், எளிய நடையும் தொல் காப்பியத்திற்கு யான் உரை எழுதுவது மிகையென்று நினைக்கச் செய்தன. பின்னர் என் உரையைப் பூர்த்தி செய்யும் எண்ணத்தை விடுத்து, இளம்பூரணத்தை அச்சிட்டு வெளிப்படுத்த எண்ணினேன். முதலில் எழுத்ததிகாரத்தை ஒருபுத்தகமாகவும், பின்னர்ப் பொருளதிகாரத்தின் அகத்திணையியலையும், புறத்திணையியலையும் ஒரு புத்தகமாகவும் அச்சிட்டு வெளிப்படுத்தினேன். அச்சமயம் யான் சென்னையை விட்டுக் கோயமுத்தூர் முதலிய வெளியூர்களுக்குச் சென்று வசிக்க நேர்ந்தது. அதனால் இளம்பூரணப் பொருளதிகாரத்தின் பிந்திய இயல்களை அச்சிட்டு முடிக்க இயலாமற் போய்விட்டது.

வ. உ. சிதம்பரம் பிள்ளை

நூற்றாண்டு விழாவைக்காணும்

தனக்குவமையிலாத் தலைவன்

வ. உ. சி.

திருப்பெயர் வாழ்க!

❋

சந்திரமோகன் கம்பெனி

49-A, ஜி. ஏ. வீதி, சென்னை-21

தொலைபேசி : 52521

❋

செண்பகம்	—	பயற்றம் பருப்பு
மல்லிகை, முல்லை	—	உழுந்தம் பருப்பு
சங்கர் யோகம்	—	துவாரம் பருப்பு

தரம்மிகுந்த பருப்பு வகைகள் தயாரிப்பாளர்கள்!

உதவிச்சிறப்பு

சீர்காழி அருணாசலக் கவிராயர்

இராகம் : தோடி] [தாளம் : ஆதி

பல்லவி

செய்தால் புலவர்களுக்கே சகாயம்
செய்து கவிபெறுதல் ஞாயம் —செய்தால்

அநுபல்லவி

செய்யே அனம்—சேர் அக்கம்மாள் பேட்டைவாழ்
செயமுத்து வேங்கடா சலசெட்டி யார்குமாரா
மெய்யேஉருக் கொண்டு வந்ததென்ன வந்த
வேங்க டாசல தீரா—ஓங்கு புகழ்கெம் பீரா
வீரா அரிவையர்—மனமகிழ் மாரா
காரார் கரம்உள—கர்ணவ தாரா –செய்தால்

சரணங்கள்

சீத மதிவதனன்—ஏகமில் சீயகங்கன்
செய்த சகாயந்தன்னை மதித்து—பவணந்தி
சிறந்தநன் னூலிலவன் இறந்தும் இறவாமலே
செய்தானே பாயிரத்துள் பதித்துப்—பின்னும்
தீதில் அருணகிரி—நாதருக் குபகாரம்
செய்து மனமகிழத் துதித்துப்—பிரவுட
தேவ மகராயனும் மேவித் திருப்புகழில்
திகழ்ந்திருக்கப் பெற்றான்பார் கதித்து—நாளும்
கோதில் மொழிகள்ராக—வனைப்போல் மொழியும் சீலா
குணசிகா மணியென எவரும் புகழுமேலா
குணமில் பரமலோ பியர்பிரதி கூலா
குணம்உடைய புலவர் குலபரி பாலா —செய்தால்

சங்கையில் லாமலந்தக் கொங்கராயர் முன்செய்ச
காயத்தி னலல்லவோ நற்றார்—வில்லிபுத்தூரார்
சந்திர சூரியருள்ள அளவும்தம் புகழ்நிற்கச்
சயபா ரதத்தில்பாடப் பெற்றார்—கார்போற்சொரியும்

அங்கை உடையதிரு வெண்ணெய்நல் லூர்ச்சடை
யப்ப முதலியாரும் கற்றூர்—கம்பருக்குமுன்
அகமகிழ்ந் திடவேச காயஞ் செய்தேராமா
யணத்தில் என்றைக்கும் நிலை யுற்றூர்—ஆதலினுலே
மங்களமாம் செந்தேன் மாலைமருவும் மார்பா
வைசிய குலமிலங்க வந்துதித்திடும் தீபா
மதுரம் ஒழுகமிருது மொழிபகர் பூபா
வரும் இரவலர்மகிழ அருள்பிர தாபா —செய்தால்

அழிவில்லே தங்கஞோதிக் கிழியறுத்திட்டபெரி
யாழ்வாருக் கோர்சகாயம் புரிந்து—பல்லாண்டில்
அகன்றஉலகீ ரேழுமுள் ளளவும்செல்வ நம்பியும்
அமர்ந்திருக் கின்ருன்புகழ் விரிந்து—எங்குநிறைந்த
வழுவில்மா யவன்பால்வாள் வலியால்மந் திரங்கொண்ட
மங்கையர் கோனுக்குமுன் பரிந்து—சகாயம்
மகிழச்செய் தேபல்லவ ராயன் திருமொழியில்
வாழ்ந்திருக் கின்ருன்நீபார் தெரிந்து—இன்னமும் சொல்வேன்
ஒழிவில் லாமல்புல வோருக்களித்துச் சொர்னம்
ஓங்குகவி பெற்ருரே உலகில்பிர புக்கள் முன்னம்
உடல்பொருள்கள் எவையும் நிலையிலை பின்னம்
உறுதி இதுவேவேறு உறுதியிலை இன்னம் —செய்தால்

நவமன்மதனைப் போலுருவம் இருந்தென்ன சௌபாக்கிய
நலமிருந்தென் என்றுள்ளம் வைத்தாய்—பாடும்
நாவலமை உடைய பாவலர்க் களித்துப்பா
நாம்கொள்வோம் என்ருனந்தம் உற்ருய்—இந்தப்
புவிகள் இப்படி செய்தே கவிகள் பெற்ருர் என்றுன்றன்
புத்தியினுலும் ஆலோ சித்தாய்—நீயும்
புகழ்பெற எங்கள்மனம் மகிழ்வுறச் செய்தெங்களால்
புத்தமுதம் போறகவி பெற்ருய்—இனியோர்
சவியில்லா மானிடரிப் புவிமேல் இருந்துமின்ன
தனகன வஸ்துவா கனம்அறு போகித்தென்ன
ததியினி உதவிசெய் பவர்களில் உன்ன
தானேஇனி எவர்க ளெனினும் புகழ்துன்ன —செய்தால்

(அக்கம்மாள் பேட்டை வேங்கடாசல செட்டியார் மீது பாடியது.)



எல்லாம் வல்ல இறைவன் அருளால் திருவள்ளுவ நாயனார் திருக்குறளுக்கு யான் இயற்றியுள்ள உரையில், அறப்பாலுரை மூலத்துடன் அச்சாகி முற்றுப் பெற்றது. அதனை அச்சிடத் தொடங்கிய காலையில் அறப்பால், பொருட்பால், இன்பப்பால் ஆகிய மூன்று பால்களின் உரைகளையும் மூலத்துடன் அச்சிட்டு, அவற்றை ஒரே புத்தகமாக வெளியிட வேண்டுமென்று நினைத்தேன்.

இப்போது, திருவள்ளுவ மாலைச் செய்யுள்களும், மகாவித்வான் மீனுட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் முதலிய நால்வர் செய்யுள்களும், அவற்றின் உரைகளும், அறப்பால் மூலமும் உரையும், முந்நூறு பக்கங்கள் ஆகின்றன.

பொருட்பால் மூலத்திற்கும் உரைக்கும் முந்நூறு பக்கங்களுக்கு மேலாகுமென்றும், இன்பப்பால் மூலத்திற்கும் உரைக்கும், திருவள்ளுவரது காலம், சாதி, சமயம் திருக்குறளை இயற்றியதற்குரிய காரணம், அக்காலத்துத் தமிழ் நாட்டின் நிலைமை, திருக்குறளுக்கு ஆதாரமான நூல்கள், முதலியவற்றைப் பற்றிய எனது ஆராய்ச்சிக் குறிப்புக்களுக்கும் சில ஏறக்குறைய முந்நூறு பக்கங்கள் ஆகுமென்றும் நினைக்கிறேன்.

அதுபற்றி, ஒவ்வொரு பாலையும் அதனதன் உரையையும் தனித்தனி ஒவ்வொரு புத்தகமாக வெளியிடத் துணிந்து, இப்பொழுது அறப்பாலையும் அதன் உரையையும் ஒரு புத்தகமாக்கி வெளியிடுகின்றேன்.

அறப்பாலில் 76 குறள்களில் என் உரை பரிமேலழகர் உரைக்கு வேறுபடுகின்றது; 12 குறள்களில் என் உரை அவர் உரையை வெளிப்படையாக மறுக்கின்றது; 5 குறள்களில் என் உரை அவர் உரையை வெளிப்படையாக ஆமோதிக்கின்றது. மீதக் குறள்களில் என் உரையும் அவர் உரையும் ஒத்திருத்தல் கூடும்.

அறப்பாலில் பரிமேலழகர் கொண்டுள்ள மூல பாடங்களுக்கு வேறாக 151 மூல பாடங்களை மணக்குடவரும் மற்றும் மூன்று உரையாசிரியர்களும் கொண்டுள்ளார்கள். பரிமேலழகர் கொண்டுள்ள மூல பாடங்களுக்கு வேறாக 74 மூல பாடங்களை யான் கொண்டுள்ளேன். அவற்றில், 30 பாடங்கள் முந்திய உரையாசிரியர்கள் கொண்டுள்ள பாடங்கள். மீதம் 44 பாடங்கள்தான் யானாகக் கொண்டுள்ள பாடங்கள்.

அப் பாடங்களை யான் கொண்டதற்குரிய காரணம், அப் பரிமேலழகர் பாடங்கள் ஏடு பெயர்த்தெழுதியோரால் நேர்ந்த பிழைப் பாடங்கள் என யான் கருதியதே. யான் கருதியது போலவே, பழம் பெரும் புலவரான மகாவித்வான் மீனுட்சிசுந்தரம் பிள்ளையவர்களும் பல பிழைகள் அக்காரணத்தால் மூலத்தில் புகுந்துள்ளன என்று கருதியிருக்கிறார்கள்.

அவர்கள் திருக்குறள்-பரிமேலழகருரை ஆறுமுக நாவலர் பதிப்புக்குக் கொடுத்துள்ள சிறப்புச் செய்யுள்களில் ஒன்றில்,

"ஏட்டுவரைந் தெடுத்துணர்ந்து
வருநாளி லெங்கணுஞ்சா
லெழுத்துக் குற்றம்,

ஓட்டும் வகை யுணராராய்ப்
பரம்பரையொன் றேகருதி
யொழிந்தா ரந்தோ"

என்று கூறியிருத்தல் காண்க.

இந் நூலையாவது அச்சுப்பிழை இல்லாமல் அச்சிடுவிக்க வேண்டுமென்று யான் மிக்கவாக் கொண்டிருந்தேன். அதற்காக அதன் புருவ்களை என்னுடன் பார்க்க வேண்டுமென்று என் நண்பர்களான மதுர ஆசிரியர் திரு. க. ரா. இராதா கிருஷ்ணைய ரவர்களையும், பிரசங்க ரத்தினம் திரு. மு. பொன்னம்பலம் பிள்ளையவர்களையும் வேண்டிக் கொண்டேன்.

ஒவ்வொரு புருவும் என்னால் மூன்று முறையும், அவர்களால் இரண்டு முறையும் படிக்கப் பட்டது. அவ்வாறு படிக்கப் பட்டும், அச்சுப் பிழைகள் "மற்றொன்று சூழினும் தான்முந் துறும்" என்றபடி எங்கள் மூவர்களுக்கும் தெரியாமல் நூலுள்ளே நுழைந்து, "பிழை திருத்தம்" என்னும் ஒரு பக்கத்தைக் கவர்ந்து விட்டன.

இராதாகிருஷ்ண அய்யரவர்கள் என்னுடன் புருவ் பார்த்ததோடு எனது உரையை ஆங்காங்குச் சரிபார்த்தும் தந்தார்கள். பொன்னம்பலம் பிள்ளை யவர்கள் புருவ் பார்த்ததோடு அய்யரவர்களும் யானும் எனது உரையில் சிற்சில இடங்களில் பொருத்தமான சொற்களைப் பெய்தற்காக ஆலோசனை செய்துகொண்டிருந்த போது பொருத்தமான சில சொற்களைச் சொல்லியும் உதவினார்கள். அவ்வுதவிகளுக்காக அவ்விருவர்க்கும் எனது மனமார்ந்த வந்தனங்களை அளிக்கிறேன்.

இந்நூலை அச்சிட்டுக் கட்டுதற்கு எனக்குப் பொருள் அளித்தவர்கள் இந்நகரின் கண் பல சீர்களும், சிறப்புக்களும் பெற்று வாழும் புதுக்கோட்டை மிட்டாதாரும் பெரிய நிலச்சுவான்தாரும், அதி தனவந்தரும், திருநெல்வேலி டிஸ்டிரிக்கு போர்டு திருச்செந்தூர் திரு சுப்பிரமணிய சுவாமி தேவஸ்தான கௌரவ தருமகர்த்தருமாகிய திரு. அ. செ. சு. கந்த சுவாமி ரெட்டியாரவர்களும், அவர்களது அவிபக்த அருமை மைத்துனரும், திருநெல்வேலி டிஸ்டிரிக்டு போர்டு அங்கத்தினரும், தூத்துக்குடி ஸர்க்கிள் தேவஸ்தானக் கமிட்டி வைஸ்பிரசிடண்டு மாகிய திரு. அ. செ. சு. முத்தைய ரெட்டியாரவர்களுமே.

எனது நண்பர்களிற் சிலர் என்னைப் பார்த்து "நீங்கள் அதிர்ஷ்ட சாலிதான், மாகாத்மா காந்திக்கு ஜமன்லால் பஜாஜி கிடைத்தது போல உங்களுக்கு ரெட்டியார்கள் கிடைத்திருக்கிறார்கள்" என்று சொல்வதுண்டு. அதற்கு "நானும் கடவுள் ஞானத்திலும், தேசபக்தியிலும், பாஷாபிமானத்திலும் குறைந்தவனல்லவே" என்று பதில் சொல்வதுண்டு.

அவ்விரு வள்ளல்களும் இன்னும் பல பெண் மக்களும் ஆண்மக்களும் பெற்றுப் பெருகி "வாழையடி வாழையென" இவ்வுலகின்கண் என்ஞான்றும் இன்பமும் புகழும் எய்தி வாழ்ந்திருக்கும் படியாகவும், அவர்கள் வீட்டு வாயில்கள் நித்திய கல்யாண வாயில்களாய் விளங்கும் படியாகவும் அருள்புரிய வேண்டுமென்று எல்லாம் வல்ல இறைவனை யான் இறைஞ்சுகின்றேன்.

தூத்துக்குடி
9—2—1935 } வ. உ. சிதம்பரம் பிள்ளை.

(இது, இவரது திருக்குறள் அறப்பாலுககு எழுதிய முன்னுரையாகும்.)

கவிக்குயில் சீனி. தேவராசன்
அவர்களின்

அரிய படைப்புக்கள் !

கவிக்குயில் (கவிதை)	ரூ. 2—00
அருட் காதல் (கவிதை)	ரூ. 0—80
தமிழ் மகள் (காவியம்) —அச்சில்	

இந்நூல்களை உங்கள் சிந்தனைக்கு விருந்தாக்குங்கள் !

பாவேந்தர் பதிப்பகம்

60J/8, சென்னிகிரி நிலையம்,

சூரம்பட்டி வழி, ஈரோடு.

சென்னை
சாந்தி · கிரௌன் · புவனேஸ்வரி
(டீலக்ஸ் ஏர்கண்டிஷன்ட்)
மற்றும் தென்னாடெங்கும்
விஜயா & சுரேஷ் கம்பைன்ஸ்
வசந்த மாளிகை
ஈஸ்ட்மென் கலர்
ELEGANT
தயாரிப்பு: D.ராமாநாயுடு
டைரக்ஷன்: K.S.பிரகாஷ்ராவ்

ஸ்டேஜ் பிரண்ட்ஸ்

சென்னை - 14

★

சன்னிநித் தெரு

நவாப் நாற்காலி

மந்திரி குமாரி

போன்ற

நகைச்சுவை நாடகங்களை அளித்த இந்தக் குழுவின்

புதிய நகைச்சுவை நாடகம்

"பட்டணம் பறிபோகிறது"

இதில் பங்கு பெறுவோர் :

"பாரதி கலைஞர்" *S. V.* சகஸ்ரநாமம்

தலைமை கொண்ட சிறந்த கலைக்குழு.

★

20, தாண்டவராயன் தெரு,

சென்னை-14



[வ. உ. சி. அவர்கள் மிகவும் விரும்பிப் பயின்ற வேதாந்தநூல் கைவல்லிய நவநீதமாகும். அந்நூலிலிருந்து இதோ சில அரிய கருத்துக்கள்!]

சாதனம் இன்றி ஒன்றைச் சாதிப்பார் உலகில் இல்லை.

தன்னையும் தனக்கா தாரத் தலைவனை யுங்கண் டானேல்
பின்னையத் தலைவன் தானாய்ப் பிரமமாய்ப் பிறப்புத் தீர்வான்.

இன்னது தேகம் தேகி இவனென உணர்வான் யாவன்
அன்னவன் தன்னைத் தானென் றறிந்தவன் ஆகும் என்பர்.

அழுக்கொடு பற்றும் சீவர்க் கதுவேயா னந்த கோசம்.

சரங்கள்தா பரங்கள் பேதம் தனியுடல் வியட்டி என்பர்.
பரம்பிய எல்லாம் கூட்டிப் பார்ப்பது சமட்டி என்பர்.

கற்பனை வந்த வாறு காட்டினோம்; காண்ப வெல்லாம்
சொப்பனம் போல எண்ணித் துணிந்தவன் ஞானி யாவான்.

ஆதாரம் மறைந்து போனால் ஆரோபம் எங்கே தோன்றும்?

பஞ்சகோ சமமும் விட்டால் பார்க்கின்ற போது பாழாம்.

தத்துவ அனுபோ கந்தான் சாதித்தல் கேட்டல் என்பர்;
ஒத்துள பொருளு கத்தால் உசாவல்சிந் தித்தல் என்பர்;
சித்தமே காந்த மான தரிசனம் தெளிதல் என்பர்.

உன்முகம் போற்கண் ணாடிக் குள்ளொரு முகங்கண் டாற்போல்
சின்மய வடிவின் சாயை சித்துப்போல் புத்தி தோன்றும்.

எரிகின்ற விளக்கால் கண்ணால் இருட்பொருள் காணல் வேண்டும்.
தெரிகின்ற பரிதி காணச் சென்றிடில் கண்ணே போதும்.
விரிகின்ற சகத்தைக் காண விருத்தியும் பலமும் வேண்டும்.

விருத்தியும் பலமும் கூடும் விகாரமே மனமென் பார்கள்.

[வ. உ. சி. இறுதி நேரத்தில் பாடச்சொல்லிக் கேட்ட பாரதியார் பாடல் இதுதான்.]

என்று தணியுமிந்தச் சுதந்திர தாகம்?
என்று மடியுமெங்கள் அடிமையின் மோகம்?
என்றெம தன்னைகை விலங்குகள் போகும்?
என்றெம தின்னல்கள் தீர்ந்துபொய் யாகும்?
அன்றொரு பாரதம் ஆக்கவந் தோனே!
ஆரியர் வாழ்வினை ஆதரிப் போனே!
வென்றி தருந்துணை நின்னரு ளன்றோ?
மெய்யடி யோமின்னும் வாடுதல் நன்றோ?

பஞ்சமும் நோயுமின் மெய்யடி யார்க்கோ?
பாரினில் மேன்மைகள் வேறினி யார்க்கோ?
தஞ்ச மடைந்தபின் கைவிட லாமோ?
தாயுந்தன் குழந்தையைத் தள்ளிடப் போமோ?
அஞ்சலென் றருள்செயுங் கடமையில் லாயோ?
ஆரிய! நீயுநின் அறம்மறந் தாயோ?
வெஞ்செயல் அரக்கரை வீட்டிடு வோனே!
வீர சிகாமணி ஆரியர் கோனே!

கப்பலோட்டிய தமிழர் வ. உ. சிதம்பரனார் அவர்கள்



தம் குடும்பத்துடன் இறுதிக் காலத்தில் வாழ்ந்த இல்லம் இதுதான்.

கறுத்தால் முகிலுக்கு வீரியம்; வாய்தனைக் காத்துணவு
சிறுத்தால் வியாதிக் கதுமருந் தே;பிறர் செய்தபிழை
பொறுத்தார் மிகப்பெரி யோராவர்; தீயினில் பொன்னைமுற்ற
வறுத்தால், பசுந்தங்க மாமே குறுங்கை மலைநம்பியே!

நூல் : நம்பிச் சதகம் நூலாசிரியர் : யோகீச்வரன் ராமன்பிள்ளை

அறுசுவை உண்டி அமர்ந்தில்லாள் ஊட்ட
மறுசிகை நீக்கியுண் டாரும்—வறிஞராய்ச்
சென்றிரப்பர் ஓரிடத்துக் கூழெனில் செல்வமொன்(று)
உண்டாக வைக்கப்பாற் றன்று.

நூல் : நாலடியார் நூலாசிரியர் : சமண முனிவர்

சுற்றத் தினர்க்கும் துயர்சேர் மிடியினர்க்கும்
பற்றற் றவர்க்கும் பகிர்ந்துண்டு—கற்றவரால்
காரியா காரியங்கள் கண்டியற்றிக் காமுறுதல்
சீரியார் வாழ்க்கைச் சிறப்பு.

நூல் : திருவெண்பா நூலாசிரியர் : தண்டபாணி அடிகள்

கட்டி அணைத்திடும் பெண்டிரும் மக்களும் காலத்தச்சன்
வெட்டி முறிக்கும் மரம்போல் சரீரத்தை வீழ்த்திவிட்டால்
கொட்டி முழக்கி அழுவார் மயானம் குறுகியப்பால்
எட்டி அடிவைப்ப ரோ!இறை வாகச்சி ஏகம்பனே!

நூல் : தனிப்பாடல் நூலாசிரியர் : பட்டினத்தார்

கல்கத்தாவுக்குப் போன மறுநாள்—எங்களுடைய ஜாகையில், ஸ்ரீமான் வ. உ. சிதம்பரம் பிள்ளை ஒவ்வொருவரையும் கண்டு பேசி காந்தியின் தீர்மானத்துக்கு எதிராக வாக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். அப்படிக் கேட்டுக் கொண்டபோது வாக்குவாதம் முற்றி நாமக்கல் ஆர். வரதராஜ முதலியார் சிதம்பரம் பிள்ளையை அவமதித்துப் பேச ஆரம்பித்துவிட்டார். பின்னர் வ. உ. சியின் அருமை பெருமையை அறிந்த முதலியார் மள மளவெனப் பிள்ளையவர்களிடம் ஓடினார்; கண்ணீர் சோரக் கை கூப்பி நின்று மன்னிப்புக் கேட்டுக் கொண்டார். தியாக மூர்த்தியாகிய சிதம்பரம் பிள்ளை முதலியாரைக் கட்டித் தழுவித் தாமும் கண்ணீர் கலங்கித் தேறுதல் செய்தார்—என்று நாமக்கல் கவிஞர் தம் நூலில் குறிப்பிடுகிறார்.

சிதம்பரனார் சிறையிற்பட்ட துன்பம் கொஞ்சமன்று. கல்நெஞ்சம் படைத்த சிறையதிகாரிகள் கொலை, களவு முதலிய பாதகச் செயல்களைப் புரிந்து தண்டனை பெற்ற கொடியவர்களைவிட அவரைக் கேவலமாக நடத்தினர். அறுசுவையுண்டு அரசர்போல் வாழ்ந்த சிதம்பரச் சீமான் சிறையில் கேழ்வரகுக் கூழுண்டார்—என்று ம. பொ. சி. தம் நூலில் குறிப்பிடுகிறார்.

1936-ல் வ. உ. சி. படுத்த படுக்கையாக இருந்தார். வீட்டில் சாப்பாட்டுக்குக் கஷ்டம். அப்போது ஒரு பெண் கவிஞர் அவரைப் பார்ப்பதற்காக எட்டயபுரத்திலிருந்து வந்திருந்தார். அவர் மிகவும் வறிய நிலையில் இருப்பதையும் தம்மிடம் ஏதாவது உதவிநாடி வந்திருக்கக் கூடும் என்பதையும் உணர்ந்தார். அப்போது சற்றும் எதிர்பாராதவிதமாகப் பம்பாயிலிருந்து 300 ரூபாய் யாரோ வ. உ. சி.க்கு அனுப்பிய பணம் அந்த நேரத்தில் வந்து சேர்ந்தது. அந்தப் பணத்தை அப்படியே வாங்கிக் கவிஞரிடம் கொடுத்தார் வ. உ. சி. வீட்டில் மருந்து வாங்கக்கூடப் பணமில்லாத அந்த நிலையிலும் தமிழ்க் கவிஞர் ஒருவருக்கு உதவி செய்தார்—என்று வ. உ. சி. சுப்பிரமணியம் தம் கட்டுரையில் கூறுகிறார்.

அரிய தேச பக்தர் ஸ்ரீமான் வி. ஓ. சிதம்பரம் பிள்ளை தமது இல்லத்தில் நேற்றிரவு 11 மணிக்குக் காலமானார். துக்கத்தைத் தெரிவிப்பதன் அறிகுறியாக ஆங்காங்குக் கறுப்புக் கதர்க் கொடிகள் தொங்கவிடப்பட்டன. மளிகைக் கடை முதலாளிகள் கடைகளை அடைத்தார்கள். கறுப்புக் கொடிகளால் அலங்கரிக்கப்பட்ட விமானத்தில் ஸ்ரீமான் பிள்ளையின் பிரேதம் பல நூற்றுக் கணக்கான காங்கிரஸ் வாதிகளும அபிமானிகளும் மௌனமாகச் சூழ்ந்துவர தேசிய பஜனையுடன் இடுகாட்டிற்குக் கொண்டு போகப்பட்டது. என்ற செய்தி—சுதேசமித்திரனில் 1936 நவம்பர் 21-ல் வெளிவந்திருக்கின்றது.

செக்கிழுத்த சிதம்பரனாருக்கு எங்கள் அஞ்சலி! போன் நெ. 683

காஞ்சிபுரம் எண்ணெய் உற்பத்தியாளர் & சோப்பு தொழிலாளர் கூட்டுறவு குடிசைத் தொழில் சங்கம் லிட்., நெ. IND. 47

44-B, திருக்கச்சிநம்பி தெரு, காஞ்சிபுரம்-3



பனைவெல்லம் சேர்த்து, மாட்டுச் செக்கில் தயாரிக்கப்படும் சுத்தமான ''அக்மார்க்'' எள் எண்ணெய்; பிண்ணாக்கு மற்றும் சலவைக்குச் சிறந்த ''காஞ்சீ பார் சோப்பு'' முதலியவைகளை வாங்கி உபயோகிக்க வேண்டுகிறோம்.

***K. S.* பார்த்தசாரதி**
தலைவர்

திலகா வைத்தியக் கல்வி நிலையம்

28, மேலப் பொன்னகரம் 8-வது தெரு, மதுரை-10.

ஆங்கில வைத்திய முறையைத் தபால் வழி தமிழில் கற்று வைத்திய அறிவைப் பெற விரும்பினால், இதன் விபரங்களுக்கு 50 காசு தபால் தலையுடன் விண்ணப்பிக்கவும்.

உங்கள் வைத்திய அறிவிற்கு ஆதரவாகக் கீழே குறிப்பிடும் பிரத்தியேக வெளியீடுகள் தமிழில் எங்களிடம் கிடைக்கின்றன. இவைகள் மருத்துவத் துறையினரின் பெரும் மதிப்பைப் பெற்றவை. *V. P. P.*யாகப் பெறலாம்.

1.	''பார்மகோ மெடிக்கா'' (மெட்டீரியா மெடிக்கா)	ரூ	25 00
2.	''பர்மகோலஜி' முதல் பாகம்		10 50
3.	''தாய்மை மருத்துவ நூல்'' (ஊட்ட சத்துகளும் பயனும் இலவசம்)		10 50
4.	ஸல்பா & ஆன்டிபயோட்டிக்ஸ்''		9 00
5.	''ஸ்டீபன்ஸ் பிரிஸ்கிருப்ஷன் கைட்''		10 00
6.	ஹெலன் வைத்திய சஞ்சிகை வருட சந்தா		9 00

(விலைகள் தபால் செலவு நீங்கலாக)

விரைவில் வர இருப்பவை :

''பார்ம கோலஜி'' இரண்டாம் பாகம் (மயக்க மருந்துகளும் அவற்றின் பயனும்)
''டாக்டர்களின் பாக்கெட் கைட்''

ராஜம்— **இயக்குநர்**

முத்தமிழ் தமிழர் வளம்! 'முப்பணி' தமிழக விவசாய வளம்!

நிலத்தைப் பண்படுத்தல்; பாசன வசதி; மின்னேற்றம்

இம்முப்பணியே நிலவள வங்கிகளின் அணி.

கரம்பு நிலங்கள் கழனி ஆயின; வரண்ட பகுதியெல்லாம் இப்பொழுது வளவயல்கள்!

பசுமைப் புரட்சியால் விளைந்த மாயம்!!

இப்பசுமைப் புரட்சியின் சாதனமே நிலவள வங்கி.

நிலவள வங்கியில்

தவணைத் தொகை போடுவது

உணவுப் பெருக்கத்துக்கு வழிவகை செய்வது

அதோடுஉச்ச வட்டி; உயர்ந்த பணிக்கு உதவி

ஆகவே, நிலவள வங்கியில் தவணைத் தொகை போடுங்கள்;

நிரந்தர வளத்துக்கு வழி கோலுங்கள்.

மற்ற விவரங்களுக்கு

தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கி லிமிடெட்,

32, லஸ் சர்ச் சாலை, சென்னை-4.

மு. சண்முகம், M. L. A.,

தலைவர்.

உங்கள் தேவைக்காக

ரொக்க விலையில்

ரேடியோ	சைக்கிள்
டிரான்சிஸ்டர்	தையல் மெஷின்
ரிக்கார்டு பிளேயர்	மின்சார விசிறி
டேப்ரிக்கார்டர்	ஸோபா-கம்-பெட்
கேஸ் ஸ்டவ்	ஸ்டீல் பீரோ
குக்கர்	கடிகாரங்கள்

இல்லம் எழில் பெற

எல்லாவித பொருள்களும்

எளிய தவணைகளில் பெறலாம்.

D. A. P.

D. A. பிரேம்ராஜ் & கோ.,

4/8-F வேனல்ஸ் ரோடு, எழும்பூர், சென்னை-8

சுரதாவின் வ. உ. சி. மலருக்கு

எங்கள் வாழ்த்துக்கள் !

❋

சிறந்த புத்தகங்களுக்கு :

இளங்கோ பதிப்பகம்

14, உஸ்மன் ரோடு,

தியாகராய நகர், 600017

உயர்தரமான வெளியீடுகள்

செங்கனி பாகம் I	கவிஞர் காவிரி நாடன்	10	00
செங்கனி பாகம் II	,,	10	00
மன விழுதுகள்	,,	1	75
நெருப்பில் புழுத்த புழுக்கள்	,,	4	25
ஞான வயல்	,,	4	00
கடவுளைப் பார்	மேகலை	2	00
கொன்றைப் பூ	தாமரைக் கண்ணன்	4	[illegible]
சொல்லாஞ்சலி	என். வி. கலைமணி	4	25
வைகையும் வால்காவும் (சோவியத் பரிசு பெற்றது)	த. கோவேந்தன்	0	75

பாப்பா பதிப்பகம்

நுங்கம்பாக்கம் : : சென்னை-34

புரட்சித் தலைவர்
வ. உ. சி. யின் புகழ்

எங்கும் எட்டட்டும்!

விண்ணை முட்டட்டும்!!

★

சத்யா மூவீஸ்

5-A, ராமசாமி ஐயர் தெரு,

கோபாலபுரம், சென்னை-86

சங்கர நாராயண பிள்ளை

முதன் முதல் வ. உ. சி.யைச் சிறைவாயிலில் வரவேற்றவர்

தூத்துக்குடியில் வாழ்ந்துவரும் இச்சங்கர நாராயண பிள்ளைக்கு இப்போது 84 வயதாகிறது. இவர், வ. உ. சி.யின் ஆருயிர் நண்பர். அவரோடு சேர்ந்து அரசியல் போராட்டங்களில் ஈடுபட்டவர். வ. உ. சி. சிறையிலிருந்து விடுதலையாகி வெளிவந்தபோது, அவரை முதன் முதல் வரவேற்றவர் இவரே.

பரலி சு. நெல்லையப்பர்

முதன் முதல் வ. உ. சி.யின் வரலாற்றை எழுதியவர்

போலிகள் புகழப்படும்போது, அறிஞர்களின் புகழ், மறைவில் இருந்து கொண்டு அழுகிறது—என்பதற்கு எத்தனையோ பேருடைய தியாகம் நமக்கு எடுத்துக் காட்டாக இருக்கிறது. பழம் பெரும் தேசபக்தரான பரலி சு. நெல்லையப்பர் அவர்கள் வறுமையோடு போராடிக் கொண்டே வாரஏடொன்று நடத்தினார். சிறைக்குச் செல்ல அஞ்சிய அந்தக் காலத்திலேயே அவர் துணிந்து சிறை சென்றார். எழுத்தாளர்களும் அவரை மறந்து விட்டனர். அரசியல்வாதிகளும் அவரை அடியோடு மறந்து விட்டனர். நாட்டுக்குப் பாடுபட்ட அந்த நல்லவரே வ. உ. சி.யின் வாழ்க்கை வரலாற்றை முதன் முதல் எழுதி வெளியிட்டவர்.

இ. ராம. இ. ரெங்கசாமி

முதன் முதல் வ. உ. சி.யின் நினைவாக விடுமுறை விட்டவர்

தோழர் இ. ராம. இ. ரெங்கசாமி அவர்கள் செல்வமும் செல்வாக்கும் மிக்கவர். புகழ் தூங்காத மதுரையிலே பிறந்தவர். பயன் படாத நம்பிக்கைகளை எதிர்த்துவரும் ஒரு பகுத்தறிவுவாதி. கட்டுரைகளையும் கவிதை நூல்களையும் மிகவும் விரும்பிப்படிப்பவர். தாம் நடத்திவரும் படிப்பகத்தின் வாயிலாக இவரே முதல் முதன் வ. உ. சி. நினைவு நாளுக்கு விடுமுறைவிட்டவர்.

முதன் முதல் வ. உ. சி.யாக நாடகத்தில் நடித்தவர்

'முத்தமிழ்க் கலா வித்வ ரத்னம்' என்றும், 'அவ்வை சண்முகம்' என்றும் அழைக்கப்படும் தி. க. சண்முகம் அவர்கள், நாடகக் கலையின் மூலம் 50 ஆண்டுகளாக அரும்பெரும் தொண்டாற்றிவருபவர். ஸ்ரீதர் போன்ற எழுத்தாளர்களையும், கே. ஆர். ராமசாமி போன்ற நல்ல நடிகர்களையும் உருவாக்கிவிட்டவர். வ. உ. சி. யின் வரலாற்றை முதன் முதல் நாடகமாக்கி அந்நாடகத்தில் செக்கிழுத்த சிதம்பரனார் வேடந்தாங்கி அற்புதமாக நடித்தவர் அவ்வை சண்முகம் அவர்களே!

அவ்வை தி. க. சண்முகம்

முதன் முதல் வ. உ. சி.யின் வரலாற்றைப் படமெடுத்தவர்

புகழ் பெற்ற படாதிபதிகளுள் ஒருவராகவும், சிறந்த இயக்குநராகவும் விளங்குகின்ற பி. ஆர். பந்துலு அவர்கள் ஒரு காந்தியவாதி. விளம்பரத்தையோ, வீண் ஆடம்பரத்தையோ ஒரு போதும் விரும்பாதவர். கப்பலோட்டிய தமிழன் வ. உ. சி.யின் வரலாற்றை இவரே முதன் முதல் திரைப்படமாக எடுத்தவர்.

B. R. பந்துலு

முதன் முதல் வ. உ. சி.யாகத் திரைப் படத்தில் நடித்தவர்

பெரியார் ராமசாமி யாரையுமே எளிதில் பாராட்டி விடுவதில்லை. அப்படி அவரால் பாராட்டப் பெற்றவர்கள் புகழ் பெறாமல் இருந்ததுமில்லை. பெரியார் என்றைக்குச் 'சிவாஜி கணேசன்' என்று அழைத்தாரோ, அன்று முதல் இன்றுவரையில் 'நடிகர் திலகம்' சிவாஜி கணேசனின் புகழ் நாளுக்கு நாள் வயதுபோல வளர்ந்து கொண்டே இருக்கிறது. கட்டபொம்மனாக நடித்த சிவாஜி கணேசனே கப்பலோட்டிய தமிழனாகவும் முதன் முதல் திரைப்படத்தில் நடித்தவர்.

சிவாஜி கணேசன்

துரை ரெங்கசாமி வெளியிட்ட

திரு இ. ராம. இருளப்பக் கோனர்

நினைவுப் படிப்பகம்.

19. இராமாயணச் சாவடித் தெரு, மதுரை.

துவக்கநாள் : 11-4-1954

நிறுவியவர் : இ. ராம. இ. ரெங்கசாமி

விடுமுறை நாட்கள்.

1. ஒவ்வொரு சனிக்கிழமை பிற்பகல் ½ நாள்
2. மகாத்மா காந்தி (பிறந்தநாள் விழா)
3. புத்தர் பெருமான் ,,
4. பெரியார் ஈ. வெ. ராமசாமி ,,
5. திரு. கே. காமராசர் ,,
6. ஆனந்தரங்கம் பிள்ளை பிறந்த நாள் விழா
7. தைப் பொங்கல் முதல் இரண்டு நாட்கள்
8. மே தினம்
9. இந்திய குடியரசு தினம்
10. ஆகஸ்டு சுதந்திரத் திருநாள்
11. வள்ளலார் இராமலிங்கர் நினைவு நாள்
12. திரு. வ. உ. சிதம்பரம் பிள்ளை ,,
13. திரு. வி. கலியாண சுந்தரனர் ,,
14. திரு. இ. ராம. இருளப்பக் கோனர் ,,
15. படிப்பக ஆண்டு விழா
16. புத்தகங்கள் தணிக்கை செய்யும் நாள்
17. மறைமலை அடிகள் நினைவு நாள்
18. திருவள்ளுவர் நினைவு நாள்

நிர்வாகி
இ. ராம. இ. ரெங்கசாமி
11-4-1954

1

தேசாபிமானி வ. உ. சிதம்பரம் பிள்ளை

(வ. உ. சி. அவர்களைப் பற்றி 21 புலவர்கள் பாடிய பாடல்களின் தொகுப்பு நூல்)

தொகுத்தவர் : பி. வேலாயுதம் பிள்ளை
வெளியீடு :
வெளிவந்த ஆண்டு : 1935

2

கவிஞர் நெஞ்சில் நேரு

(நேரு அவர்களைப் பற்றி 53 கவிஞர்கள் பாடிய பாடல்களின் தொகுப்பு நூல்)

தொகுத்தவர் : கே. இராமமூர்த்தி
வெளியீடு : வானதி பதிப்பகம், சென்னை-17
வெளிவந்த ஆண்டு : நவம்பர், 1965

3

கவிஞர் கண்ட ம. பொ. சி.

(ம. பொ. சி. அவர்களைப் பற்றி 51 கவிஞர்கள் பாடிய பாடல்களின் தொகுப்பு நூல்)

தொகுத்தவர் : கவி. கா. மு. ஷெரீப்
வெளியீடு : இன்ப நிலையம், சென்னை-4
வெளிவந்த ஆண்டு : 26, ஜூன் 1966

4

கவிஞர் நெஞ்சில் காமராசர்

(காமராசர் அவர்களைப் பற்றி 120 கவிஞர்கள் பாடிய பாடல்களின் தொகுப்பு நூல்)

தொகுத்தவர் : அரங்க. பாண்டியன்
வெளியீடு : பனிமலர்ப் பதிப்பகம், சென்னை-21
வெளிவந்த ஆண்டு : செப்டம்பர், 1966

5

கவிஞர் கண்ட அண்ணா

(பேரறிஞர் அண்ணா அவர்களைப் பற்றி 81 கவிஞர்கள் பாடிய பாடல்களின் தொகுப்பு நூல்)

தொகுத்தவர் : மூவேந்தன்
வெளியீடு : பூங்கொடி பதிப்பகம், சென்னை-4
வெளிவந்த ஆண்டு : ஜூன், 1969

6

வாழ்க நீ எம்மான்

(காந்தி அடிகளைப் பற்றி 43 கவிஞர்கள் பாடிய பாடல்களின் தொகுப்பு நூல்)

தொகுத்தவர் : கவிஞர் வா. மு. சேதுராமன்
வெளியீடு : கவியரசன் பதிப்பகம், சென்னை-2
வெளிவந்த ஆண்டு : அக்டோபர், 1969

7

கலைஞர்க்குக் கவிதை மாலை

(டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்களைப் பற்றி 52 கவிஞர்கள் பாடிய தொகுப்பு நூல்)

தொகுத்தவர் : புலவர் மு. அன்பரசன்
வெளியீடு : கல்வி வெளியீடு, சென்னை-13
வெளிவந்த ஆண்டு : 9, ஜூலை 1971

குறிப்பு : முதல் முதல் வ. உ. சி. அவர்களுக்கே கவிதைத் தொகுப்பு நூல் வெளிவந்தது.

கார்த்திகேயா என்ஜினியரிங் பவுண்டரி,

திண்டுக்கல் ரோடு, பழனி.

★

ஸ்டில் பர்னிசர் தயாரிப்பாளர்கள்

எங்களது தயாரிப்புகள் :

ஸ்டில் பீரோ, கட்டில், மேஜை, சேர்,

சோபா, கம்பெட் முதலியன.

இன்டர் நேஷனல் பைனன்ஸ் அண்டு டிரேடிங் கம்பெனி

சிட்பண்ட்ஸ்

பெருந்தலைவரைப்

பாராட்டிய புலவர்கள்!

1. மு. ரா. கந்தசாமிக் கவிராயர்
   (மதுரைத் தமிழ்ச் சங்கப் புலவர்)
2. வ. சண்முகம் பிள்ளை
3. இராமசாமிக் கவிராயர்
   (சேற்றூர் சமஸ்தானப் புலவர்)
4. புலவர் கந்தசாமி ஐயர்
5. சுப்பிரமணியக் கவிராயர்
   (மதுரைத் தமிழ்ச் சங்கப் புலவர்)
6. ஸ்ரீவைகுண்டம் ஆறுமுக தேசிகர்
7. ஆழ்வார் திருநகரி, பெரிய திருவடிக் கவிராயர்
8. மு. ரா. அருணாசலக் கவிராயர்
   (சேற்றூர் சமஸ்தானப் புலவர்)
9. சே. ரா. சுப்பிரமணியக் கவிராயர்
   (மதுரைத் தமிழ்ச் சங்கப் புலவர்)
10. தெய்வநாயகப் புலவர்
11. சகஜாநந்த சாமியார்
12. ஓட்டப்பிடாரம் இசையறிஞர் சு. முத்துசாமிப் பிள்ளை
13. அனந்த பத்மநாப பிள்ளை
    (ஆழ்வார் திருநகரி பென்ஷன் ரெவினியூ இன்ஸ்பெக்டர்)
14. சவரிமங்கலம் புலவர் சிதம்பரம் வேலுப் பிள்ளை
15. லால் பேட்டை நா. குப்புசாமிப் பிள்ளை
16. பாளையங்கோட்டை வி. சண்முகம் பிள்ளை
17. த. மு. சொர்ணம் பிள்ளை
    (திருநெல்வேலி இந்து கல்லூரித் தமிழ்ப் புலவர்)
18. சதாசிவம் பிள்ளை
    (நாகை "நீலலோசனி" இதழாசிரியர்)
19. வி வைத்தியநாதசாமி ஸ்தபதி
    (திருவாரூர் திருவள்ளுவர் மடம்)
20. மலாக்கா ஜேசின் நெ. வை. செல்லையா
21. தே. வீரராகவ ஐயங்கார்
    (சேலம் மாவட்டம் ஓமலூர் உயர்தரக் கலாசாலை ஆசிரியர்)

("தேசாபிமானி வ. உ. சிதம்பரம் பிள்ளை" என்னும் நூலில் உள்ள புலவர் பட்டியல் இது.)

மாணவ, மாணவிகளே! குமாஸ்தாக்களே! வியாபாரிகளே! தொழிலாளர்களே!

ஆங்கிலத்தில் இலக்கண ரீதியாக
எழுதவும் பேசவும் வேண்டுமா?

- முதல்வர் க. அனுமந்தன் ஆங்கில இலக்கணத்தை எளிய முறையில் போதிப்பதில் அரும்பெரும் சாதனைகளைச் செய்து வருகிறார்.
- உங்கள் படிப்புத் தகுதிக்கு ஏற்ற முறையில்வகுப்புக்கள் நடத்தப்படுகின்றன.
- S. S. L. C யும் அதற்கு மேலும் படித்தவர்களுக்கு 6 மாதப் பயிற்சி.
- ஓரளவு ஆங்கிலம் தெரிந்தவர்களுக்கு 9 மாதப் பயிற்சி.
- ஆங்கிலம் ஒன்றுமே தெரியாதவர்களுக்கு ஒரு வருடப் பயிற்சி.
- ஓய்வு நேரத்தில் வந்தால் போதும்.

ஆங்கிலப் பயிற்சி நிலையம்

85/87, அரண்மனைக்காரன் தெரு, சென்னை-1.

போன் : 26880

தொலைபேசி எண் : 661896

தரமான செங்கற்களை சகாயமான விலையில்
துரிதமாக சப்ளை செய்யும்

ஹரி செங்கல் நிலையம்

(HARI BRICK WORKS)

அலுவலகம் : 163-A, பூந்தமல்லி பெரியசாலை, சென்னை-29

தொழிலகம் : நூம்பல் கிராமம்.

பூரண உரிமையாளர் :

திரு. *T. S.* இராமதாஸ் நாயுடு

163-A, பூந்தமல்லி பெரிய சாலை, சென்னை-29.

இது, துவர்க்கிறது!

1906ஆம் ஆண்டுக்கு முன்பு, சென்னையிலே நம்மவர்கள் வாழ்ந்த பகுதியை 'பிளாக் டவுன்' என்றும்; அதாவது 'கறுப்பர் நகரம்' என்றும்; நம்மை அடக்கியாண்ட வெள்ளையர் வாழ்ந்த பகுதியை 'ஒயிட்டவுன்' என்றும்; அதாவது, 'வெள்ளையர் நகரம்' என்றும் ஆங்கிலேயர் அழைத்து வந்தனர். நிறவேறுபாட்டின் காரணமாக ஏற்பட்ட இந்தப் பாகுபாடு இன்று நமக்கெல்லாம் மாம்பிஞ்சைப் போல் துவர்க்கும் செய்தியாகவே இருக்கிறது.

இது, புளிக்கிறது!

தஞ்சை மாவட்டத்தில் உள்ள திருவையாற்றிலே பிறந்தவரும், சிறந்த கட்டுரை எழுத்தாளரும், சுதேசமித்திரன் உதவியாசிரியருமாகிய சி. வி. சாமிநாத ஐயர் அவர்கள் எடுத்துக் கொண்ட இடைவிடாத முயற்சியின் காரணமாக 'பிளாக் டவுன்' என்ற பெயர், 'ஜார்ஜ் டவுன்' என்று மாற்றப்பட்டது. இந்த மாற்றம் முழு மகிழ்ச்சியைத் தரவில்லை யாதலால், இதுவும் நமக்கு மாங்காயைப் போல் புளிக்கும் செய்தியாகவே இருக்கிறது.

இது, இனிக்கிறது!



முதலில் 'பிளாக் டவுன்' என்றும், அடுத்து 'ஜார்ஜ் டவுன்' என்றும் அழைக்கப்பட்டு வரும் இப்பகுதி, தஞ்சை மாவட்டம் தந்த முதல் முதலமைச்சராகிய டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்களால் 'வ. உ. சி. நகர்' என்று பெயர் மாற்றம் பெறவிருக்கிறது. காங்கிரஸ் ஜாம்பவான்களான காமராசரோ, பக்தவத்சலமோ செய்யத் தவறிய இந்த நல்ல காரியத்தைக் கலைஞர் கருணாநிதி அவர்கள் விரைவில் செய்து முடிக்கத் திட்டமிட்டிருப்பதாக வெளிவந்திருக்கும் இந்த நற்செய்தி, நமக்கெல்லாம் மதுரமான மாங்கனியைப் போல் இனிக்கிறது!

—சுரதா

பாதிக்கப்பட்டோர்
மட்டும் கவனிக்கவும்

என் அருமை வாலிப நண்பர்களே
மணமானவர்களே !

உங்களுக்கு உண்மையான,
நேர்மையான, முறையான,
நம்பிக்கையான

வைத்திய ஆலோசனையும்,
சிகிச்சை முறையும்.

வாலிப பருவம் என்பது நம்
வாழ்க்கையிலேயே முக்கியமான
பருவம்!

Dr. S. R. சிவராஜ் R.I.M.P. R. S. சிவகுமார் R. I. M. P.

இந்தப் பருவ நேரத்தில்தான், நாம் மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டிய நேரம். ஆனால் இந்த நவநாகரீக உலகில், இந்தப் பருவ நேரத்தில் பல கெட்ட சிநேகிதர்களாலும், பல ஆபாசகாதல் காட்சிகளைப்படங்களில் பார்த்து மனதைத்தளரவிடுவதாலும் வாலிபர்கள் சுய இன்பம் என்ற மாயையில் சிக்கியும், தன்னைவிட வயதில் மூத்தவர்கள், உடல் நலம் கெட்டவர்கள் ஆகியவர்களின் தொடர்பாலும், வேறு பலவிதமான கெட்ட செயல்களாலும் ஒரு வாலிபர் தன்னை மறந்த நிலையில், தவறுகள் செய்ய ஆரம்பிக்கிறார். இந்தத் தவறு செய்பவர்கள், தான் செய்வது தவறு என்று புரியும் சக்தியில்லாமல், அந்தத் தவறையே நாள் கணக்கில், மாதக் கணக்கில் பிறகு வருஷக் கணக்கில் செய்துவருகிறார்கள்.

அவரவர்கள் செய்யும் தவறுகள், செய்கையைப் பொறுத்து உடல் பாதிக்கப்படுகிறது. திரேகத்தில் அதிக உஷ்ணம்—கண் எரிச்சல்—தூக்கம் குறைவு கெட்ட கனவு—ஞாபக மறதி—பயம்—வெட்கம்—நடுக்கம்—உடம்பில் வலி—முதுகு நடுதண்டு வலி—சோர்வு—பலகீனம்—கைகால் அசதி—தளர்ந்து போதல்—நீர் எரிச்சல்-மலக்கட்டு-பசிக்குறைவு-வயிற்று வலி—வாய்வு உபத்திரவம்—தலைவலி—மண்டை இடி—மயக்கம்—பீனிசம்—தும்மல்-நீர்வடிதல்—கபம்—மேல்மூச்சு—இருமல்-மணம் செய்ய பயம்-மணமானவர்கள் தங்களின் இல்லற வாழ்க்கையில் திருப்தியின்மை—ஏமாற்றம் இவைகளால் பாதிக்கப்பட்டு மனம் வருந்தும் நண்பர்களே?

இந்த விளம்பரத்தைப் படிக்கும் வாலிப நண்பர்கள் உங்களின் எதிர்காலத்தை முன்னிட்டு,கெட்ட செயல்களில் ஈடுபடாமலிருக்கக் கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறுபாதிக்கப்பட்ட நண்பர்கள் இதுவரை உடல் நலத்தைக் காப்பாற்றிக் கொள்ள பல சிகிச்சை செய்திருக்கலாம், அப்படி சிகிச்சை செய்தும், குணம் கிடைக்காதவர்கள், என் அனுபவப்பூர்வமான, உண்மையான, முறையான, வைத்திய ஆலோசனையையும்—சிகிச்சை முறைகளையும் கேட்டுத் தெரிந்து வசதியிருந்தால் பெறலாம்.

பொது மக்களின் வசதியைப் பொறுத்து நான், சிகிச்சையில் பிரிவு ஏற்படுத்திக்கொடுத்திருக்கிறேன். அவரவர்களின் பண வசதியைப் பொறுத்து, எந்த சிகிச்சை வேண்டுமானாலும் பெறலாம். குணம் கிடைத்து வருவது முன் பின் ஏற்படும்.

விசேஷ ஸ்பெஷல் சிகிச்சை 30 வயது முதல் 50 வயது உள்ளவர்களுக்கு செய்யக் கூடியவை. வசதியுள்ளவர்களுக்குத்தான் இந்த சிகிச்சை.

25 வயதானவர்களுக்கும் மணமானவர்களுக்கும் ஸ்பெஷல் சிகிச்சை. 22 வயது முதல் 25 வயது வரையுள்ளவர்களுக்கு 1 நெ. சிகிச்சை.

வசதி குறைந்த வாலிபர்களுக்கும், மணமானவர்களுக்கும் கடை சிகிச்சை 2 நெ. சிகிச்சை, தொடர்ந்து சிகிச்சை பெற்று வந்தால்தான் படிப்படியாக குணமாகி வருவதைக் காணலாம். — 1 மாத சிகிச்சைக்கு :—

விசேஷ ஷ்பெஷல் சிகிக்சைக்கு	ஸ்பெஷல் சிகிச்சைக்கு	1 நெ. சிகிச்சைக்கு	2. நெ. சிகிச்சைக்கு
ரூ. 150-00	ரூ. 65-00	ரூ. 50-00	ரூ. 40-00

1 மாத சிகிச்சைக்கு பார்சல் மூலம் அனுப்ப தபால் செலவு ரூ. 5-00 தனி

குறிப்பு :— பார்சல் மூலம் சிகிச்சை பெறுவோர் தேவையான சிகிச்சையைக் குறித்து, லெட்டர் எழுதி, P. V. P. மூலம் பெறலாம்.

—: விபரங்களுக்கு :—

சிவராஜ் சித்த வைத்தியசாலை

சிவதாபுரம், S. O. சேலம். **போன் : 5742**

சரிதக்களமுர சிதம்பரனார்

விழிப்புற்று விடுதலையை வேண்டிப் பெற்று
வெள்ளிவிழாக் கொண்டாடி மகிழும் நன்ருள்!
மொழிப்பற்றே தாய்நாட்டுப் பற்றுக் கெல்லாம்
மூச்சாகும்; அஃதில்லார் மனித ராகார்!
செழிப்பற்றுச் சீர்கெட்டுப் போன தேசம்
சிறப்படையச் சிலபேரே தியாகம் செய்தோம்!
பழிப்புற்றுச் சொரணையற்ற பாம ரர்க்குப்
பாடமாக நாம் அமைவோம்; பதவி வேண்டாம்!

நான்காண்டு சிறைவாழ்ந்தேன்; செக்கி ழுத்தேன்;
நமக்கென்ன கிடைக்குமெனக் கேட்க வில்லை!
போங்காணும்! தியாகத்தை விலைக்குப் பேசும்
புத்தியெனக் கில்லைஅன்று! தமிழை ஆய்ந்து,
தேன்காணும் திருக்குறள். தொல் காப்பி யத்தின்
தீஞ்சுவைசேர் உரைபதித்தேன்; நூல்கள் யாத்தேன்.
நான்காண—மதியாதோர் நாச மானூர்!
நற்றமிழர், சிலைநாட்டிப் புகழ்சேர்க் கின்றூர்!

வாழ்கின்ற காலத்தில் ஆண வத்தின்
வாய்க்கொழுப்புக் குறையவில்லை! இறங்கி வந்து
தாழ்கின்ற நிலைகண்டு; தத்தோம் என்று
தாங்கவொண்ணு எரிச்சலுடன் ஆடு வோரைச்
சூழ்கின்ற துதிபாடிக் கூட்டத் தார்க்குச்
சொல்லியல்ல; செயலாலே பதிலு ரைக்க
ஆள்கின்ற இற்றைநாள் நல்லோர் போல
அன்றெவரும் இருந்திலரே—ஏனே சொல்வீர்?

"கல்லூரிக் கட்டடத்தைக் கட்டித் தந்தேன்;
கல்சுமந்தேன்; மண்சுமந்தேன்; அதனுல் நானே
கல்லூரி முதல்வராக இருப்பேன்!' என்ருல்—
கைகொட்டிச் சிரிப்பாரே! அதுபோல், 'முன்னர்
எல்லோரும் போராடி வெள்ளை ஆட்சி
இங்கிருந்து வெருண்டோடச் செய்த தாலே
நல்லவரோ கெட்டவரோ நாங்கள் மட்டும்
நாடாள்வோம்! என்கின்றூர்; நகைப்போம் வாரீர்!"

—கவிஞர் ஆனந்தம்

பூங்கொடி பதிப்பகத்தின் புதிய
சிறந்த நூல்கள் சில...

சிலப்பதிகார ஆராய்ச்சி	—ம. பொ. சி.	5	00
சான்றோரின் சாதனைகள்	,,	5	00
வண்ணத் தோகை	—கா. வேழவேந்தன்	6	00
அண்ணாவின் கடைசி நாட்கள்	—நாகை தருமன்	8	00
அந்தரங்கம்	—பி. எல். ராஜேந்திரன்	5	50
மணப்படகு	,,	4	00

பூங்கொடி பதிப்பகம்

34, வடகூர் செல்வ விநாயகர் கோயில் தெரு
மயிலாப்பூர் : : சென்னை-4

வ. உ. சி. நூற்றுண்டு மலருக்கு
எங்கள் நல்வாழ்த்துக்கள்!

அசோகன் பதிப்பகம்

சிறந்த நூல்களை வெளியிடுவோர், விற்பனையாளர்.

சுரதாவின் தேன்மழை (புதிய பதிப்பு) ரூ 7 50
(தமிழ் நாடு அரசின் பரிசு பெற்ற நூல்)

கல் சொல்லும் கதைகள் 3 50
(வெள்ளையாம் பட்டு சுந்தரம்)

(வரலாற்றுத் துறைக்கோர் வழிகாட்டி! கல்வெட்டு ஆய்வுத் துறை பற்றி எல்லாச் செய்திகளையும் எடுத்துரைக்கும் முதல் நூல்.)

அசோகன் பதிப்பகம்

56, உசுமான் சாலை
தியாகராய நகர் : : சென்னை-17

ஓட்டப்பி டார மென்னும்
ஊரிலே பிறந்து, கப்பல்
ஓட்டப்பி றந்தேன் என்னும்
உரிமையைப் பகைவர் அஞ்சக்
காட்டப்பி றந்தோன்; போற்றும்
கனற்றமிழ் வீரந் தன்னை
நாட்டப்பி றந்த சங்க
நாவலன் வ. உ. சி. யே!

உரிமையைக் கேட்ட தாலே
உளமிலா அயலார் அன்று
பரிசெனச் சிறைசேர் வாழ்வைப்
பாங்கின்றி நல்க, அங்கும்
விரிதமிழ்க் கவிதை பாடி
விம்மிதம் கொண்டே ஆண்பெண்
சரிசம வாழ்வு காணும்
சரித்திரம் எழுத லானான்.

வக்கீலாம் பணியி ழந்தும்,
வாழ்வதன் அணியி ழந்தும்,
திக்கிலார் போலு ழந்தும்,
திடமதை இழக்கா வண்ணம்
செக்கிழுத் திட்ட செம்மல்
சிதம்பரம் பிள்ளை வாழ்வை
இக்கணம் நினைக்கும் போதும்
இதயமும் கனியு மன்றோ!

விண்ணாட்டு வாழ்வும் வேண்டேன்;
வேறெந்தப் பேறும் வேண்டேன்;
என்னாட்டுச் சுதந்த ரத்தை
எய்திட வேண்டு மென்ற
தென்னாட்டுத் திலகன்; சொல்லில்
தேனாட்டும் மறவன்; இந்தப்
பொன்னாட்டுப் புலவன் கொண்ட
புகழதும் மறையு மாமோ?

—கவிஞர் இளங்கம்பன்

பழனி

ஸ்ரீகந்த விலாஸ்

No1.ஸ்பெஷல் பஞ்சாமிர்தம்

ஜவ்வாது வாசனை விபூதி

சிறந்தது. Sri Devi Arts, MDU.

கலைஅரங்கு, காலரி, ஸ்டால்கள் !

பெவிலியன்கள் காண்டிராக்டர்.

★

உங்கள் தேவைக்கு அணுகவும்.

எம். குமரேசன்

22, 3-வது, மெயின்ரோடு,

நேரு நகர் : 1 சென்னை-20

போன் : 76149

செக்கிழுத்த செம்மல்

நரித்தனத்தின் துரைத்தனமே ஆட்சி கொள்ள
நாமெல்லாம் கொத்தடிமை கிடந்த நேரம்;
சரித்திரத்தில் தரித்திரமே பதிய வைக்கும்
சதிகார வெள்ளையரை விரட்டு தற்கே
''அரியசெயல் செய்யுங்கள்! உரிமை வாழ்வின்
அடிப்படையை உணர்த்துங்கள்!'' எனமு ழங்கப்
புரிந்தகுடி—தூத்துக்குடிக் கடலின் மேலே
புறப்பட்ட பெருங்கனலே தமிழன் கப்பல்!

கப்பலெனில் அலங்காரக் கப்ப லல்ல!
கருத்தோங்கும் தமிழாய்ந்த பெரிய நெஞ்சம்
தெப்பமிடத் துணிவுற்ற அந்தக் கப்பல்
திசைக்கிழக்குச் சுதந்திரத்தின் கொடிப றக்க
உப்புறையும் கடல்மேலே உலவு கப்பல்;
உலகத்துப் பார்வையெலாம் ஈர்த்த கப்பல்!
அப்புகழின் கப்பலோ டெதிர்த்த வாணர்
அறிவறிந்த சிதம்பரனார் தியாக சீலர்!

குலைவாழைக் கனிகள்போல் பரிசு தந்து
குன்றிடினும் புகழ்கொண்டான் வள்ளல் பாரி!
மலைமோதிப் பொழிகின்ற கொண்டல் தோற்க
வழங்கியவன் கொடைக்கேணி சீதக் காதி;
நிலையாமை ஆய்ந்தோனும் பகத்சிங் வீரன்
நிலையாத உடல்தந்தான்! அவர்க ளைப்போல்
அலைமுகத்தில் சிதம்பரனார் கப்ப லோட்டி
அருந்தமிழன் தியாகத்தின் வரலா றானார்!

காரோட்டம் சுகித்தோரும் சிறையி ருந்தார்;
கனல்வெப்பத் தண்டனைகள் சுமந்தார்; செல்வச்
சீரோடு பாங்குமனை வாழ்ந்த பேரும்
சிலநாட்கள் துன்புற்றார்; கிளிகள் போல;
வேரோடும் அடிமைத்தளை வெட்டு தற்கே
வெள்ளோட்டம் கண்டவராம் சிதம்ப ரர்போல்
பேரோடு புகழோடு நிலைத்தி ருக்கப்
பெருந்துயரச் செக்கிழுத்தார் யாரே! யாரே!

—கவிக்குயில் சீனி. தேவராசன்

ஹோட்டல் சிவசக்தி விநாயக கந்தா

டாக்டர் சுப்பராயன் ரோடு,

சேலம்-1

(சைவ உணவு விடுதி)

காலை 6 மணி முதல் இரவு 12 மணிவரை

அறுவகை சட்னிகளுடன் சுவைமிக்க

உணவு வகைகளும் பரிமாறப்படும்.

உரிமையாளர்கள்

M. S. சண்முகம் பிரதர்ஸ்

M. S. மோகன்

மௌலானு O. M. மஹமூதுரப்பானி



தொப்பி அணிந்துள தோழர் ரப்பானி,
குரானுக்கு விளக்கம் கூறுவதில் வல்லவர்,

மாந்தி ரிகத்தின் மூலமாக
ஒட்டும் பிணிகளை ஒழித்திட வல்லவர்!

சராசரி மக்களின் தராதரம் அறிந்த
உலகியல் வாதியாம் ஓ. எம். மஹமூது
பார்சி மொழியிலே பாடல் எழுதுவார்!
அரபியும் உருதும் அருமையாய்ப் பேசுவார்!

ஒப்பற்ற தலைவர் வ. உ. சி. பற்றிய



உரையிடை இட்ட பாடல்கள்

கட்டபொம் மன்போல் வெள்ளைக்
கயவரின் கயமை மிகக
கொட்டத்தை அடக்க, வீரங்
கொண்டவர் சிதம்ப ரந்தான்.

—மணமேடு குருநாதன்

சிதம்பரம் பிள்ளையை நான் நன்கறிவேன். மாசு மறுவற்ற தேசபக்தர். களங்கமற்ற நெஞ்சுடையவர்; அவரது வீரப்புரட்சியை இப்போது நினைத்தாலும் எனக்கு உணர்ச்சி மேலிடுகிறது. அப்பெரியார் தமிழ் நாட்டார் சிலை எடுத்துப் போற்றுவதற்குத் தகுதியுடைய வீரராவர்.

—சேலம் சி. விஜயராகவாச்சாரியார்

மானம் மறவா மறத்தமிழ்த் தலைவன்;
உயிரும் உடலும் உலகிற் கீந்தவன்;
நன்னூல் படித்துத் தன்னூல் படைத்தவன்.

—புலவர் இரா. இரகுபதி

நான் இங்கிலாந்தில் இருந்த போதும், அதற்குப் பின்னர் கொஞ்ச நாள் வரையிலும் அரசியல் புரட்சிக்காரனாகவே இருந்தேன். அதற்குக் காரணம் சிதம்பரம் பிள்ளை நடத்திய தூத்துக்குடிப் புரட்சியேயாகும். எனவே சிதம்பரனார் எனது முதல் அரசியல் குரு என்பதைப் பெருமையுடன் சொல்லிக் கொள்கிறேன்.

—டாக்டர் டி. எஸ். எஸ். ராஜன்

இலகிருளை அகற்ற வந்த கதிரோன்! இந்த
இந்தியத்துச் சரித்திரத்தை முத்தால் தீட்டி
உலகறியச் செய்தபெரும் தியாகச் செம்மல்!
உறுதியுடன் மிதவாதம்வெறுத்த அண்ணல்!

—எழில் வேந்தன்

பிள்ளையவர்கள் உணர்ச்சிக் களஞ்சியம் ரொம்ப யோக்கியர். அற்பத்தனம் சிறிதும் இல்லாதவர். பொய் நடையையும் வஞ்சகப் பேச்சையும் அறவே ஒழித்தவர்.

—அறிஞர் வ. ரா.

வன்மையுடன் நின்றெதிர்த்த
தீரனும்—சிதம்பரம்
வாழ்வளித்த தேசபக்த வீரனும்!

—செங்கை அழகன்

புரட்சிக் கருத்துக்களைக் கொண்ட வ.உ.சி. தம் நூல்களின் வாயிலாக அவற்றை மக்கட்கு எடுத்து வழங்கினார். கைம்பெண் திருமணத்தை ஆதரித்தார். துணையிழந்தாரை மணப்பது புண்ணியம் எனக் கூறினார்.

—சு. த. காசி ராஜன் எம்.ஏ;

அவருயிரோ தியாகத்தின் வெப்பக் காற்றும்!
அவர்வாழ்க்கை நமக்கெலாம் அறிவுப்பாதை

—நாமக்கல் நாதன்

நம்முடைய இளம் தலைமுறையினருக்கு, நாட்டுப் பற்று ஏற்பட வேண்டும் என்பதற்காகவே வீரபாண்டிய கட்டபொம்மன், கப்பலோட்டிய தமிழன் போன்ற படங்களில் நடித்தேன்.

—நடிகர் திலகம் சிவாஜி கணேசன்

பண்பற்ற துரைமார்கள் சிறையில் போட்டும்
பத்தரையின் மாற்றான தங்கச் சீமான்!

—ஆர்ப்பாக்கம் கவிப்பித்தன்

உப்புக் கடலில் கப்பல் செலுத்தியும்,
செக்கினை இழுத்தும் செங்குருதி சிந்தியும்,
தீரமாய் வாழ்ந்து செத்தவர் சிதம்பரம்!

—ஆதமங்கலம் ஏகாம்பரம்

கவிஞர் சுரதா

வடக்கேஓர் திலகர்; தெற்கே
வ. உ. சி. இல்லை என்றால்,
விடுதலை பெறாத வாறு
மிதவாதி தடுத்தி ருப்பான்.
படிக்கட்டு தன்னில் குந்திப்
பழங்கதை பேசும் நாட்டில்,
கொடுப்பதை வாங்கும் பிச்சைக்
கொள்கைதான் வளர்ந்தி ருக்கும்!

கொட்டாவித் தலைவ ரெல்லாம்
கொக்கரித் தெதிர்த்த நாளில்—
வெட்டாத வாளும்; நன்கு
விளையாத நிலமும்; கைக்கே
எட்டாத கனியும் காயும்
இருந்தென்ன? வெள்ளைக் காரன்
பட்டாளம் என்ன செய்யும்
பார்க்கிறேன் ஒருகை என்றார்.

தகுதியும் திறனும் கொண்ட
தலைவன்தான் வெற்றி காண்பான்!
அகரந்தான் முதலில் நிற்கும்;
அவர்நின்றார். சிறந்த முத்து,
மகரமீன் தலையி லன்றி
மற்றமீன் தலையில் என்றும்
அகப்பட்டு விடுவ தில்லை!
அவர்போன்றார் இப்போ தில்லை!

வெள்ளாட்டின் தலையைக் காட்டி
ஓநாயின் கறியை விற்கும்
கள்ளிமுள் நெஞ்சம் கொண்ட
கயவர்வாழ் உலகில், இந்தப்
பிள்ளையோ தூய்மை யான
பிள்ளைப்பால் போன்றி ருந்தார்!
வெள்ளியா கறுக்கும்? கட்டி
வெண்ணெயா நீரில் மூழ்கும்?

இன்றுள்ள தலைவ ரெல்லாம்
ஏதேதோ செய்து செய்து
குன்றுபோல் செல்வம் சேர்த்துக்
குவிப்பதாய்ச் சொல்கின் றார்கள்.
அன்றைய தலைவர் பிள்ளை
ஆதலால், பணமோ காசோ
ஒன்றுமே சேர்க்க வில்லை!
உயர்ந்தவன் புகழ்தான் சேர்ப்பான்!

கனிதரும் மரங்கள் அந்தக்
கனிகளைப் புசிப்ப தில்லை!
தனிஒளி வழங்கும் தீபம்
தனக்காக எரிவ தில்லை!
மனிதருள் சிறந்தோ ரெல்லாம்
மற்றவர்க் காக வேண்டி
அனைத்தையும் இழப்பர். பிள்ளை
அவ்வாறே இழந்தார் வாழ்வில்!

அரிச்சந்திரன் பொய்சொல் லாத
அரசனாய் வாழ்ந்தான் என்பர்.
அரசியல் தலைவர் தம்மில்
அரிச்சந்திர னாக வாழ்ந்த
பெருமையைக் காந்தி இங்கே
பெறுமுன்னர் இவரே பெற்றார்.
ஒருமுறை பிறந்து வாழ்வில்
ஒரேஒரு முறைதான் செத்தார்

MARA PUBLIC

காலங்களில் அவர் வசந்தம் !

ஓய்வெடுத்துக் கொள்ளும் தென்றல் ஊர் சுற்றி வருவதற்கும்; கருங் குயில் தன் குறடு போன்ற வாய் திறந்து கூவுவதற்கும்; புன்னையும் தாழையும் பூப்பதற்கும் இடங் கொடுக்கும் காலம்—இளவேனில் என்னும் வசந்த காலமாகும். அதுபோல், அரசியலில் மற்றவர்களின் வளர்ச்சிக்கும் இடங்கொடுத்து வந்த பொறாமையற்ற பெருந்தலைவர் வ. உ. சி. ஆகவே, அவர் காலங்களில் வசந்தம் போன்றவர்.

கலைகளிலே அவர் ஓவியம் !

இசை இன்பத்தையும் நாடகக் கலையின் நயத்தையும் அறிவு நுட்பம் உடையோரே முற்றிலும் அனுபவிக்க முடியும். ஆனால், ஓவியக்கலை அப்படிப்பட்டதன்று. அது, படித் தவர்களையும் பாமர மக்களையும் மிக எளிதில் கவர்ந்து விடுகிறது. அதுபோல் வ. உ. சி. அவர்கள், கற்றவர்களாலும் மற்றவர்களாலும் நன்கு மதிக்கப்படும் தலைவராக விளங் கியவர். ஆகவே, அவர் எல்லோருடைய உள்ளத்திலும் எளிதில் பதியக்கூடிய ஓவியக் கலையைப் போன்றவர்.

மாதங்களில் அவர் மார்கழி !

ஆவணி புரட்டாசியில் வாடையும், ஐப்பசி கார்த்திகையில் குளிரும் அதிகம். மார்கழி மாதத்தில் வாடையோ குளிரோ நம்மை வாட்டுவதில்லை. அதற்குக் காரணம் உதய சூரியனின் புதிய பயணந்தான். தெற்கு நோக்கிச் செல்வதாகக் கணக்கிடப்படும் சூரியன், மார்கழி மாதத்திலேதான் வடக்கு நோக்கித் திரும்புகிறது. தெற்கே இருக்கும் உதய சூரியன் வடக்கே திரும்பி, தன் ஒளிக்கதிர்களை வீசுவதால் பனி பயந்தோடு கிறது. வாடை விடை பெற்றுக் கொள்கிறது. அவ்வாறு தீமையை விலக்கி நமக்கு நன்மை செய்யும் மாதங்களுள் சிறந்த மாதம் மார்கழி மாதமேயாகும். அதுபோல், அரசியல் அச்சத்தையும் அடிமைத் தனத்தையும் விலக்கி, நமக்கெல்லாம் நன்மான உணர்வை ஊட்டியவர் வ.உ.சி. ஆகவே, அவர் மாதங்களில் மார்கழியைப் போன்றவர்.

மலர்களிலே அவர் மல்லிகை !

கொடியில் பிறந்து மங்கையர் கூந்தலில் குடியேறும் மல்லிகைப் பூவினால், கபம் நீங்கும், கண் மயக்கம் தீரும்; உடற்சூடும் தணியும்! அதுபோல், வ. உ. சி. அவர்களின் அரிய கருத்துக்களால் தன்னலம் என்னும் கபம் நீங்கும்; மக்கள் தலைவன் தான் ஒருவனே என்னும் மயக்கம் தீரும்; அரசியலின் அதிகாரச் சூடும் தணியும். ஆகவே, அவர் மலர்களிலே மல்லிகையைப் போன்றவர்;

—சுரதா



வள்ளல் மணலி முத்துக்கிருஷ்ண முதலியார்
68, கோவிந்தப்ப நாயகர் வீதி,
சென்னை.

வள்ளல் பச்சையப்ப முதலியார்
சாமி மேஸ்திரி தெரு,
ஒற்றைவாடை, சென்னை.

பெருங்கவிஞர் அத்திப்பாக்கம்
வேங்கடாசல நாயக்கர்
14, கிரிகோரி தெரு,
ஏறுகிணறு, சென்னை.

ஆறுமுக நாவலர்
(1822—1879)
300, தங்கசாலை வீதி,
சென்னை.

இராமலிங்க அடிகள்
(1823—1874)
38, வீராசாமி பிள்ளை வீதி,
ஏழுகிணறு, சென்னை.

கொ. பள்ளிகொண்டான் பிள்ளை
(1827—1900)
17, வினைதீர்த்த முதலி வீதி,
புரசபாக்கம், சென்னை.

தமிழறிஞர் தாச்சி அருணசல முதலியார்
41, தாச்சி அருணசல முதலி தெரு,
மயிலாப்பூர், சென்னை.

சதாவதானி செய்கு தம்பிப் பாவலர்
(1855—1950)
84, ஆச்சாரப்பன் தெரு,
சென்னை.

மயிலைமகாவித்வான் சண்முகம் பிள்ளை
(1858—1905)
29, சாமி பிள்ளை வீதி,
சூளை, சென்னை.

சிந்தனைச்சிற்பி ம. சிங்காரவேலு
22, சவுத் பீச் ரோடு,
திருவல்லிக்கேணி, சென்னை.

அறிஞர் தி. செல்வக்கேசவராய முதலியார்
(1864—1921)
12, துளசிங்க முதலி தெரு,
பெரம்பூர், சென்னை.

சதாவதானி நா. கதிரைவேற் பிள்ளை
(1871—1907)
15, படை வேட்டம்மன் கோயில் தெரு,
பெரம்பூர் பாரெக்ஸ், சென்னை.

அறிஞர் பா. வே. மாணிக்க நாயகர்
(1871—1931)
"ஈஸ்வர் பாக்"
62, மௌபிரேஸ் ரோடு
தேனும்பேட்டை, சென்னை.

வ. உ. சிதம்பரம்பிள்ளை
(1872—1936)
40, பரிபூர்ண விநாயகர் கோயில்தெரு,
மயிலாப்பூர், சென்னை.

சி. சுப்பிரமணிய பாரதியார்
(1882—1921)
67, தெளிசிங்கப் பெருமாள் கோவில் வீதி
திருவல்லிக்கேணி, சென்னை.

தொகுத்தவர் : சுரதா

MADRAS
31 JAN 1973
195068